விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது+II

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

# வடக்கு-கிழக்குக்கு அதிகாரப்பகிர்வு

# அச்சத்தில் வழங்க அரசு தீர்மானம்?

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அஞ்சி வடக்கு கிழக்கிற்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும், இது தொடர்பில் விசேட குழு வொன்றை அமைத்து உண்மைகளை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்களிடையே முறுகல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்களுக்கிடையே நேற்றிரவு ஏற்பட்ட முறுகல் நிலையில் யாழ். பல்கலைக் கழக சூழலில் பதற்றம் நிலவியது.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மற்றும் வணிக பீட புதுமுகமாணவர்களின் வரவேற்பு நிகழ்வு இன்று நடைபெற விருந்த நிலையில் மூன்றாம் வருட மற்றும் இறுதி வருட மாணவர்களுக்கிடையிலேயே நேற்றிரவு (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் கைகுலுக்குவதன் மூலமே தமிழ் மக்கள் முன்னேற முடியும்!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தருஸ்மன் அறிக்கையை வைத்து இலங்கை அரசாங்கத்தை பழிவாங்க நினைப்பது மீண்டும் 30 வருடங்கள் தமிழ் மக்களை அழிவுப்பாதைக்கு அழைத்துச்செல்லும் முயற்சியாக அமையும்.

மாறாக உலக மகாயுத்தத்தில் அழிவடைந்த ஜேர்மன், ஜப்பான் நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து முன்னேறியது போன்று இலங்கை அரசுடன் (20ஆம் பக்கம் பார்க்க)



## இரட்டைவேடம் போடும் சர்வதேச சமூகம்!

### அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வலிமையான நாடுகள் மற்றும் வலிமை குன்றிய நாடுகள் என்று பட்டியல் இட்டு அந்தந்த நாடுகளுக்கேற்ப சர்வதேச சமூகம் இரட்டை வேடம் போடுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டுக்கின்றார். அமெரிக்கா பின்லேடனை கொன்றொழித்த சந்தர்ப்பம் மற்றும் இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக ஒளிபரப்பாகும்

(கொழும்பு)

நாடாளுமன்ற விவாதங்கள் நேரடியாக ஒளிபரப்பப்படவுள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக வானொலியில் மாத்திரம் இது ஒலிபரப்பப்படும் என பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

எமது நாடாளுமன்ற விவாதங்களை இலங்கை மக்களுக்காக ஒளிபரப்புவதற்கு சபாநாயகர் திட்டமிட்டுள்ளார். ஆரம்பத்தில் பரீட்சார்த்த நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படவுள்ளதால் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றம் சுமத்தப்பட்டவருக்கு இராஜதந்திரப் பாதுகாப்பா?

### ஐரோப்பிய மனித உரிமை அமைப்பு கேள்வி

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைகள் மீறல்களில் தொடர்புடையவர் எனக் குற்றம் சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு ஜேர்மனி, சுவிற்சர்லாந்து மற்றும் வத்திக்கான் போன்ற நாடுகள் இராஜதந்திர பாதுகாப்பளிப்பது குறித்து அரசியலமைப்பு மற்றும் மனித வுரிமைகளுக்கான ஐரோப்பிய நடுவம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து இந் நடுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் ஜேர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் வத்திக்கான் ஆகிய நாடுகளில் ஜகத் டயஸ் ஒரு இராஜதந்திரியாக இருந்துள்ளார்.

இலங்கை (02ஆம் பக்கம் பார்க்க)

## வனவாசம் செல்கிறார் அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க மொட்டை அடித்துக் கொண்டு வனவாசம் செல்லவுள்ளார்.

பௌத்த மதத்தில் கூறப்பட்டுள்ள தஸசில் எனப்படும் தவத்தை நிறைவேற்றவே அவர் மொட்டையடித்துக் கொண்டு பத்து நாட்கள் வனவாசம் செல்லவுள்ளார்.

இன்று காலை 8 மணியளவில் ராஜகிரியவில் உள்ள சதாகம் செவன விகாரையில் இவர் மொட்டையடித்து முடியைக் காணிக்கை செலுத்துவார். (20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK Canada and India**

Intake Get Register Now Collecting
the Application Until June 30th 2011
Start the academic on September
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
(Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப்
படுத்திய வீசாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777

# தேசிய இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2011ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டிகள் பிரதேச மாவட்ட தேசிய மட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த எனும் இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

பிரதேச மட்டத்திலான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாணவர்களும் திறந்த போட்டிகளில் இப்பிரதேச பொதுமக்களும் கலந்து கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலைகளிலும் அந்தக் கிராம சேவையாளர்களிடமும் பெற்று தமது ஆக்கங்களை 2011-05-21ஆந் திகதிக்கு முன்பாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், வலிகாமம் மேற்கு, சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாய் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணைகோட்டையம்பதிஅருள் மிகு சிறி சிவசுப்பிரமணிய ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும். (ச)

# கலாபூஷண விருதிற்கான விண்ணப்பம் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2011ஆம் ஆண்டுக்கான கலாபூசண விருதிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள் ளது. சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ் வரம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப் புறவியல், ஊடகத்துறை, சினிமா போன்ற கலைத் துறைகளில் மிகவும் சிறப்புச் சேவையாற்றி அறுபது வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவே வலிகாமம் மேற்கு பிரதேசத்தி லுள்ள மேற்படி தகைமையுள்ள கலைஞர்கள் இதற்கான விண்ணப்பங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி 2011.05.25ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வரவேற்புபசார விழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்புபசார விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா அறிவித்துள்ளார். (ச)

# போர்க் குற்றம் சுமத்தப்பட்ட...

படைத்தரப்பின் 57வது படைப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசியலமைப்பு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஐரோப்பிய நடுவம் ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளது.

2009ஆம் ஆண்டு வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக படைத்தரப்பினர் மேற்கொண்ட படைநடவடிக்கையின் போது ஜகத் டயஸ் மேஜர் ஜெனரலாக பதவி வகித்திருந்தார்.

இந் நிலையில் 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவ் விவகாரம் குறித்து விபரமான ஆவணம் ஒன்றை அந் நடுவம் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சிடம் கையளித்துள்ளது.

அத்துடன், சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு மற்றும் வத்திகானிடமும் போர்க் குற்றங்கள் தொடர்பான இந்த ஆவணத்தை அச்சுறுத்தப்பட்ட மக்களுக்கான சமூகம் என்ற அமைப்புடன் இணைந்து இந் நடுவம் கையளித்திருந்தது.

இவ்வறிக்கையில் படைத்தரப்பின் முன்னாள் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஒரு போர்க்குற்றவாளி என அறிவிக்கப்பட வேண்டும் எனவும், அவருக்கான இராஜதந்திர நுழைவு அனுமதி நிறுத்தப்பட வேண்டும் என்றும் இந் நடுவத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நாடுகள் இது குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அரசியலமைப்பு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஐரோப்பிய நடுவம் தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் படைத்தரப்பின் 57வது படைப்பிரிவினர் பாதுகாப்பு வலயப் பகுதியில் தங்கியிருந்த் தமிழ் மக்கள், வைத்திய சாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-5)

# வடக்கு–கிழக்கு...

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்க கூடாது என்று புத்தி ஜீவிகள் கூறும் போது;அரசு பிடிவாதமாக போர்க்குற்றம் தொடர்பாக ஐ.நாவிற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கப் போகின்றது. இது நிலைமையை மேலும் மோசமடையவே செய்யும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர சுட்டிக்காட்டுகின்றார்.

இதுதொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர தொடர்ந்து[illegible] கூறுகையில்,

பான் கீ மூனின் நிபுணர் குழு இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்களை சுமத்தி அறிக்கை ஒன்றை சட்டவிரோதமாக வெளியிட்டுள்ளது.

ஐ.நா.கொள்கைக்கு சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு எதிராக வெளியிடப்பட்ட குறித்த அறிக்கைக்கு பதிலளிக்கச் சென்றால் அதற்கு சட்டரீதியான அங்கீகாரம் கிடைக்கும் என்ற அடிப்படை அறிவு கூட இலங்கைக்கு இல்லையா? நிபுணர் குழுவிற்கு பதிலளிக்க தேவையில்லை என்று பல தரப்புகள் வலியுறுத்திய போதிலும் பதிலளிக்கும் விடயத்தில் அரசாங்கம் பிடிவாதமாக உள்ளது.

அரசின் இவ்வாறான செயற்பாடானது எதிர்காலத்தில் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவே அமையும். எனவே தாய் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேசப்பற்றுள்ள மக்கள் முன்வரவேண்டும். அதிகாரப் பகிர்வு போன்ற பிரிவினைவாத சிந்தனைகள் தற்போது தேசிய அரசியலில் மீண்டும் பேசப்படுகின்றது.

இவற்றை அவதானிக்கும் நோக்கில் குழு ஒன்றை அமைக்க உள்ளோம். இது தொடர்பான இறுதிக்கட்ட பேச்சு குறித்து எதிர்வரும் 12ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் கூறினார். (ச-5)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

சிறிது காலம் பாவித்த 6அடி நீளமான அதி குளிரூட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0750407723 (4867)

## தவறிவிட்டது

பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில் எனும் முகவரியுடைய இராசேந்திரம் சசிந்தன் என்பவரது தே.அ.அட்டை (803665409V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ்ஸில்பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0776630466 (4882)

## விற்பனைக்கு

வடமராட்சி புலோலிப் பகுதியில் போட்டோ கொப்பி இயந்திரம், கொப்பியர் இயந்திரம் ஆகியவற்றுடன் கூடிய அச்சகத்தை நடத்த விரும்புபவர்கள் அல்லது பொருட் களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள். தொடர்பு கொள்ளவும்.

0783035181 (4886)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இணுவில் வீதி சாத்தாவத்தை கோவிலுக்கு அருகில் கராஜ் ஒழுங்கையில் 2பரப்பு 9-8 குளி, 3அறை சகல வசதிகளுடன் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு
0773544915, 077 2565676
தரகர் இல்லை. (4883)

## சேவை முகவர்

### வீடு, காணி விற்பனைக்கு

நுணாவில் A9 றோட்டிலிருந்து 9 பரப்பு காணி, ஸ்ரான்லி வீதியில் களஞ்சியசாலைக்குரிய கட்டிடம், நுணாவில் A9 றோட்டிலிருந்து 1000m தூரத்தில் 21பரப்பு தென்னங்காணி, குமாரசாமி வீதி, கந்தர்மடம் பழம் வீதி, மணல்தறை லேன், கோண்டாவில், வைமன் றோட், ஆடியபாதம் வீதிஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு. யாழ்., நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு :சுந்தரம்

021 222 9177, 0774819801 (4692)

# 31ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

## அமரர் இராசையா தங்கமணி (சின்னக்கிளி)

| மனிதனாக | தெய்வமாக |
|---|---|
| 12 | 08 |
| 03 | 04 |
| 1937 | 2011 |



கடந்த 08.04.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்களது அன்புத் தெய்வம். அமரர் இராசையா தங்கமணி அவர்களின் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்வுகள் 08.05.2011 ஞாயிறு காலை 6.00மணி முதல் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து கொள்வதோடு மதியம் 11.30மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரம்பிட்டி
அல்வாய் வடக்கு
அல்வாய்.

தகவல்
குடும்பத்தினர்
மகன் இரா.கணேசரத்தினம்
(பவானன்)

(சி-3170)

# மரண அறிவித்தல்

## பொன்னர் சின்னத்துரை

கல்லூரி வீதி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் நவரட்ணராஜா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சின்னத்துரை 07.05.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் கதிரியின் அன்பு மகனும் அருமைநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னவன் வள்ளியி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், அழகரத்தினம் மற்றும் இராசரத்தினம், பரமநாயகம் ரவிச்சந்திரன் (ஜேர்மனி), சோதிராசா (நோர்வே), வசந்தாதேவி (ஜேர்மன்), சுசிலாதேவி, கமலாதேவி, விமலாதேவி (சுவிஸ்), சீதாதேவி, விஜய நிர்மலாதேவி (சுவிஸ்), நிர்மலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில் தொ.பே: 0214925158

தகவல்
குடும்பத்தினர்

(சி-3169)

# கல்வி நிர்வாக சேவைக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்டைக்குத் தோற்றுவோருக்கான வழிகாட்டல் செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கிரகித்தல் பற்றி யாழ். பல்லைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், நுண்ணறிவு பற்றி நேர்ப் திட்ட பணிப்பாளர் இ.தெய்வேந்திரம், விடய ஆய்வு பற்றி தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்பொ. அருணகிரிநாதன் ஆகியோர் செயலமர்வை நடத்தவுள்ளனர். (ஸ்ரீ-3)

# வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு கடற்றொழிலுபகரணங்கள் கையளிப்பு

(பருத்தித்துறை)

மீள்குடியேற்ற அமைச்சினால் வடமராட்சி கிழக்கிலுள்ள 80 கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 40 பயனாளிகளுக்கும் வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 40 பயனாளிகளுக்கும் இவ்வுதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கென 80 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. (ஸ்ரீ-3-10)

# இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சிக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட 40 கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் அணிக்கு 20 இற்கு 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு முதலாவது போட்டியில் திருநாவலூர் அணியை எதிர்த்து உதயகதிர்காமம் மோதவுள்ளது.

மற்றொரு போட்டி காலை 10.30 மணிக்கு இமையாணன் இளைஞர் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது.

மூன்றாவது போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு வல்லை அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவுள்ளது. (ஸ்ரீ-3-24)

# பருத்தித்துறை பொலிஸார் நடத்தும் நடமாடும் சேவை

(கரவெட்டி)

பருத்தித்துறை பொலிஸாரினால் நடத்தப்படும் நடமாடும் சேவை எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையானது பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காக நடத்தப்படவுள்ளதென்றும் இதில் மக்களை கலந்து கொண்டு பயன் பெற்றுக் கொள்ளுமாறும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதில் முக்கியமாக அடையாள அட்டை பெறுதல், வைத்திய சேவை, இரத்ததானம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

# வாரம் ஒரு தகவல்

## கையில் தெரியுது மனசு

"உங்களிடமிருந்து நாங்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டிருக்கு சேர்"

"நீங்க எதைச் சொல்றீங்க?"

"குறிப்பாக அடுத்தவர்களை பாராட்ட வேண்டும் என்று நீங்க நினைக்கிற போது அவர்கள் கையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்குறீங்க பாருங்க... அந்த விதம்... அது ஒரு தனிரகம்!"

"உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? கை குலுக்குகின்ற போது மூன்று விரல்களை மட்டும் கொடுப்பாங்க சில பேர்...! அவர்களெல்லாம் மனம் விட்டுப் பேச மாட்டாங்க...!"

"இரண்டு கைகளாலும் சேர்த்துப் பற்றி குலுக்குகின்றவர்களும் உண்டு...! அதிகமான அன்பை இது வெளிக்காட்டுகிறது...!"

சிலபேர் பட்டும் படாமல் கை கொடுப்பாங்க... விருப்பமில்லாதது மாதிரி! இவர்கள் தன்னலத்துக்காக எதையும் செய்யக்கூடியவர்கள்!"

"கையை இறுக்கிப் பற்றிக் குலுக்குகின்றவர்கள் இருக்கிறார்கள் பாருங்கள்... அவர்களை நம்பலாம்!"

"ஓ இதில இவ்வளவு விடயம் இருக்கா...? இருந்தாலும் நீங்க கைகுலுக்குகின்றவிதம் இதையெல்லாம் விட மேலானது சேர்!"

"அப்படியா சொல்றீங்க?"

"ஆமாம் சேர்! நேற்று நான் உங்களிடம் வந்தேனே... ஞாபகமிருக்கா?"

"ஆமாம்... வந்தீங்க...! புதுசா ஒரு தொழில் தொடங்கப் போகிறதாக கூறி என்னை ஆசீர்வாதம் பண்ணச் சொன்னீங்க... பண்ணினேன்!"

"அப்பொழுது என் கையை அழுத்தமாக பிடித்து குலுக்கி 'நல்லா இரு!' என்று சென்னீங்களே... ஞாபகம் இருக்கா?...

"ஆமாம்!"

"அது சம்பந்தமாகத் தான் இப்ப மறுபடியும் நான் வந்திருக்கிறேன்!"

"இப்ப நான் என்ன செய்ய வேண்டும். சொல்லுங்க... செய்கின்றேன்!"

"வேறு ஒன்றுமில்லை... இப்ப உங்க விரலில் இருக்கின்ற அந்த மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுக்க வேண்டும்! ஏனென்றால் நேற்று நான் என் விரலில் போட்டிருந்த மோதிரம் அது!"

"ஹி"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மஹோற்சவம்

(பருத்தித்துறை)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்டமும் எதிர்வரும் வியாழக்கிழமை மஞ்சத்திருவிழாவும் இறுதி நாளான 10 ஆம் நாள் காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்வச காலங்களில் சமய பஜனைகளும் இடம்பெறும்.

(ஸ்ரீ-3-10)

# இராசி பலன்

08.05.2011
சித்திரை 25,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 2.03 மணிவரை
திருவாதிரை முற்பகல் 8.03 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
உலக செஞ்சிலுவை தினம்
அக்கினி நாள் ஆரம்பம்.

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் நாள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் அதிகரிக்கும்.

**மிதுனம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் அன்புத்தொல்லைகளுக்கு உட்படுவீர்கள்.

**கடகம்** சில தேவைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள், சயனக் குறைவுண்டு, கதிரவன் வழிபாட்டால் வெற்றிகாண வேண்டிய நாள்.

**சிங்கம்** இல்லத்தில் சுபநிகழ்வுகள் ஏற்படுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலை விருத்தி செய்ய புதிய திட்டம் தீட்டுவீர்கள், விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வீர்கள்.

**கன்னி** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், தேகநலன் உற்சாகமடையும், தன்னம்பிக்கை வளரும் நாள்.

**துலாம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சிலர் உங்களிடம் உதவிகேட்டு வரலாம், பழைய பொருட்களை விற்று புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, தேவைகளை நிறைவு செய்ய பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

**தனுசு** உறவினர் வருகையால் சுகம் காணும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், ஆபூர்வ சந்திப்புண்டு, விருந்துபசாரத்தில் கலந்து மகிழ்வீர்கள்.

**மகரம்** மனமகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உங்கள் திறமையால் காரியம் சாதிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் ஈடுபடும் நிலை உருவாகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மீனம்** உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், எடுத்த கருமங்கள் கைகூடும், தாய்வழி உறவில் நன்மையுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 40 | 50 |
| கரட் | 70 | 70 | 70 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 30 | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 60 | 55 | 60 |
| பாகற்காய் | 120 | 100 | 110 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரண்ணக்கிழங்கு | 90 | -- | 80 |
| பயிற்றங்காய் | 60 | 30 | 40 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 80 | 50 | 50 |
| கறிமிளகாய் | 100 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 350 | 450 | 300 |
| போஞ்சி | 80 | -- | 90 |
| கத்தரி தம்புள்ள | 60 | -- | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 60 |

# விவசாய டிப்ளோமாவுக்கு விண்ணப்பம் கோரல்

விவசாயத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் இலங்கை விவசாயக் கல்லூரிகளில் விவசாய டிப்ளோமா 2012/2014ஆம் கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கோரப்பட்டுள்ளது.

குண்டசாலை (கண்டி மாவட்டம்), வவுனியா (வவுனியா மாவட்டம்), பெல்வெஹார (மாத்தளை மாவட்டம்) அங்குணுகொலவெலஸ்ஸ (அம்பாந்தோட்டை மாவட்டம்) கரப்பிஞ்ச (இரத்தினபுரி மாவட்டம்) ஆகிய 5 விவசாயக் கல்லூரிக்கும் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையிலும் மாணவர்கள் அனுமதிப்பதற் கான போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணம் உட்பட 13 இடங்களில் எதிர்வரும் யூலை மாதம் நடத்தப்படவுள்ளது.

க.பொ.த (உ/த) உயிரியல் பிரிவில் கல்வி கற்ற 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட அரச தொழிலொன்றைப் புரியாதவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மாணவர் தெரிவு போட்டிப்பரீட்சை அடிப்படையிலும் நேர்முகத் தேர்வின் மூலமும் இடம் பெறும். இது தொடர்பான விண்ணப்பங்களை யூன் மாதம் 6-ம் திகதிவரை பேராதனையில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

மேலும் தகவல்கள் தேவைப்படுபவர்கள் 06.05.2011ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையிலும் விவசாயதிணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.agridept.gov.lk) பார்வையிடமுடியும்.

**தொழில் உலகை நோக்கித் திசைப்படுத்தும் விவசாயக் கல்லூரிகள்**

தற்போது இலங்கையில் விவசாயத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 5 விவசாயக் கல்லூரிகளில் விவசாய டிப்ளோமா கற்கைநெறி வழங்கப்பட்டு வருகி றது. இங்கு சிங்களம், ஆங்கிலம், தமிழாகிய மூன்று மொழிகளில் விரும்பிய எந்த மொழியிலும் இப் பயிற்சி நெறியை தொடர முடியும்.

தமிழ் மொழி மூலமான போதனையை வவுனியா விவசாயக் கல்லூரியிலும், குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில முடியும். இதேபோல் ஆங்கில மொழி மூலமான போதனை குண்டசாலை விவசாயக்கல்லூரியில் மட்டுமே பெறமுடியும். சிங்கள மொழி மூலமான போதனையை குண்டசாலை அங்குணுகொலவெலஸ்ஸ, கரப்பிஞ்ச, பெல்வெஹார ஆகிய இடங்களில் இடம் பெறுகிறது.

இவ் விவசாய டிப்ளோமா கற்கை நெறியானது 2 வருடங்களைக்கொண்ட முழு நேர வதிவிடக் கற்கை நெறியாகும். அத்துடன் இங்கு செயல் முறைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

நாட்டின் பல்வேறு துறைகளிலும் விவசாய டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் உண்டு. பல்வேறு அரச நிறுவனங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வங்கிகளிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதற்கான அடிப்படைத் தகைமையைக் தருவதாகவும் இப் பயிற்சி நெறி அமைந்துள்ளது. இதைவிட விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு வேண்டிய ஆற்றலை வழங்கும் பயிற்சி நெறியாகவும் இது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பின்வரும் அரசதுறை வேலைவாய்ப்புகளுக்கான அடிப்படை தகைமையாக விவசாய டிப்ளோமா கற்க நெறி காணப்படுகிறது.

- விவசாய போதனாசிரியர்.
- கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்
- குடியேற்றத்திட்ட அதிகாரி
- விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்.
- தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்
- கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பொருளாதார பயிர்கள் தொடர்பான மத்திய தர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.
- பண்ணை இயந்திரவியல் போதானாசிரியர்.
- நெல் சந்தைப்படுத்தும் சபையின் மத்திய தர தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்.
- சீனி கூட்டுத்தாபன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.
- பல்வேறு பண்ணை முகாமையாளர்கள்
- வங்கிகளின் விவசாயக்கடன் அதிகாரி கள்.
- விவசாய பாட பாடசாலை ஆசிரியர்கள்.

இதைவிட தனியார் துறையில் உயர்வேதனம் பெறும் ஊழியர்களாகவும் இவ் விவசாய டிப்ளோமாதாரிகள் காணப்படுகின்றனர். விவசாய ரசாயன விற்பனைக் கம்பனிகள், விவசாய விதை உற்பத்தி, சந்தைப்படுத்தும் கம்பனிகள், விவசாயபண்ணையந்திரக் கம்பனிகள் போன்றவற்றில் சிறந்த வசதி, வேலை வாய்ப்புக்களுடன் இன்று இவ் விவசாய டிப்ளோமாதாரிகள் உயர் பதவி நிலை உத்தியோகம் வகிப்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

விவசாய நாடான இலங்கையின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக திகழும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பதற்கு விவசாய டிப்ளோமா பயின்றவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதும் உண்டு.

**பல்கலைக்கழக அனுமதியை பெற்றுத்தரும் ஒரு பயிற்சி நெறி**

விவசாய டிப்ளோமா பாடநெறியை பயின்ற பின்னர் ஐந்துவருடங்கள் அரச நிறுவனம் ஒன்றில் குறைந்தது மத்திய தர சேவையாற்றிய உத்தியோகத்தர்களை ஒரு பரீட்சையினூடாக இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் உள்வாரி மாணவர்களாக சேர்த்து விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தை வழங்குகின்றன. இதனால் க.பொ.த. (உ/த) பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட உயிரியல் பிரிவில் கல்விகற்ற மாணவர்கள் இக் கற்க நெறியை மேற்கோண்டு மீண்டும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வர்.

இவ்வாறான விவசாய டிப்ளோமாதாரிகளாக இருந்து விவசாயப்பட்டம் பெற்று மேலும் முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்று உயர் அதிகாரிகளாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் எம்மத்தியில் உயர்ந்த பலர் உள்ளனர்.

**விவசாய அபிவிருத்தியில் இக்கல்லூரிகள்**

எமது நாட்டில் விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டும் எனில் அதன் பல்வேறு துறைகளின் துறைசார் நிபுணத்துவமும் விருத்தியாக்கப்படவேண்டும். இவற்றின் மூலம் அத்துறைகளின் உயர் தொழில் நுட்பங்கள் விவசாயிகளை சென்றடையவேண்டும். ஆனால் அபிவிருத்தியடைந்த பல நாடுகளிலும் காணப்படும் பல்வேறு தொழில் நுட்பங்களையும் அதே அள்வில், அதே வகையில் எமது நாட்டு விவசாயத்துறைக்கும் பயன்படுத்த முடியாது.

இதனால் எமது நாட்டில் பல்வேறு உள்ளூர் நிலைகளுக்கமையவாகவே பயன்படுத்தப்படவேண்டும். எனவே சிறப்பான பொருத்தமான உச்சப்பயன்பாடுள்ள சூழலுக்கும் பொருத்தப்பாடுள்ள தொழில் நுட்பங்களை கண்டறிவதற்கும் ஆராய்வதற்கும் அவற்றை விரிவாக்கம் செய்வதற்கும் ஏற்ற வகையிலான ஆற்றமிக்க மனித வளங்களை உருவாக்கவேண்டும். இதற்குரிய ஆற்றலை விவசாயக்கல்லூரிகள் வழங்குகின்றன.

ப.அருந்தவம்
ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்

# மரண அறிவித்தல்

## திருமதி சீவரத்தினம் சின்னத்தங்கச்சி



இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி சீவரத்தினம் சின்னத்தங்கச்சி நேற்று (07.05.2011) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, சின்னப்பிள்ளை, நாகமணி, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்ற செல்லையாவின் மைத்துனியும் மற்றும் பராசக்தியின் அன்புத் தாயும், புஸ்பராணி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, சிவசுப்ரமணியம், கணேசலிங்கம் ஆகியோரின் சிறிய தாயாரும், ஸ்ரீஸ்கந்தராஜா, திருக்குமரன், வேலாயுதபிள்ளை, பரமேஸ்வரி, கந்தவடிவு ஆகியோரின் மாமியும், விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு (மண்டைதீவு)வின் அன்பு மாமியும்,

விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி, லோகநாதன், இரகுநாதன், கேதாரநாதன், அமரர் பஞ்சாட்சரநாதன், விக்னேஸ்வரி, நாகேஸ்வரி, ஜெகநாதன், ஜெகதீஸ்வரி, செந்தில்நாதன், கோமளவல்லி, இரகுநாதன், அரங்கநாயகி, சீதா, அனுஷா, கலைவாணி, இளஞ்செழியன், லோகேந்திரா, நகுலேஸ்வரி, பிரபாகரன், விஜிதா ஆகியோரின் பேர்த்தியும், சலஷா, சலோஜனன், வேணுஷா, பாலலோஜனன், கோபிஷா, லம்போதரன், சிந்துஜன், ராகுலன், ராகவன், நிரோஜன், கோசிகா, தனுசிகா, சரணிகா, சரண், ராகினி, வினோதினி, கௌசிகன், காரணன், கஜசரவணன், கஜனி, பாலகஜன், கௌசிகி, சங்கவி, சஜிதன், சங்கவை, சிவசங்கரி, ஆதித்தியன், ஹாரணி, கபிலேஷ், பவதாரணி, தாமீரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று (07.05.2011 சனிக்கிழமை) காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பொ.வி.திருநாவுக்கரசு (மருமகன்),

பரமானந்தவல்லி அம்மன் கோவிலடி,
இணுவில் மேற்கு.

தி.ரகுநாதன்(மோகன்)-பேரன்
(பெட்டா எசன்ஸ் -யாழ்ப்பாணம்)

(4893)

# துரித அபிவிருத்திக்கான தேடல் பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

வடமாகாண துரித பொருளாதார அபிவிருத்திக்கான தேடல் என்னும் தலைப்பில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பயிற்சிப் பட்டறை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறை வடமாகாண உள்ளூராட்சி சபையின் செயலாளர் திரு மதி விஜயலட்சுமி தலைமையில் ஆரம்ப மானது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துறைசார்ந்த அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் நீண்டகாலத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாகவும் மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும் அமைய வேண்டும் என உள்ளூராட்சி சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

# வீதி விபத்து மரணங்களை குறைக்க புதிய விதிகளை அமுல்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

வீதி விபத்துக்களால் ஏற்படும் மர ணங்களையும் காயங்களையும் குறைப் பதற்காக பல கடுமையான விதிகளை அமுல்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி சாரதிகளுக்கு சிறைத் தண்டனை விதித்தல், அபராதத்தை அதிகரித் தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு போன்ற விதிமுறைகளை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள் சமூக பொருளாதார மற்றும் சுகாதார பிரச்சினையாக அதி கரித்து வருவதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கூறியுள் ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் தினமும் 150 வாகன விபத்துக்கள் நடைபெறுவதாகவும் இவற்றால் தினமும் 5,6 பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.

1977 முதல் 2007 ஆம் ஆண்டு வரையான 30 வருட காலப்பகுயில் 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வீதி விபத் துக்களால் உயிரிழந்துள்ளதாக ஆய்வொ ன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். வீதி விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் ஆதரவற்ற வர்களாகுகின்றனர். இவ் விபத்துக்களினால் ஏற்பட்ட இழப்புக்கள் 100 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாகும்.

இதேவேளை, 75 சதவீதமான வீதி விபத்துக்கள் மனிதன் சார்ந்த தவறுகளால் ஏற்படுவதாகவும் போக்குவரத்து விதிகளை கடுமையாக அமுல்படுத்துவதன் மூலம் இவற்றை தடுக்கலாம் எனவும் போக்கு வரத்து அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்தியாக ம.தி.மு.க உருவெடுக்கும் வைகோ தெரிவிப்பு



தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக் கும் மாபெ ரும் அரசியல் சக்தியாக உருவெ டுப்போம் என ம.தி. மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க வின் 18 ஆம் ஆண்டு தொடக்க விழா சென்னையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமான தாயகத்தில் வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இதையொட்டி அங்குள்ள பெரியார், அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்தார் வைகோ. பின்னர் கட்சிக் கொடி ஏற்றி வைத்து அவர் பேசியதாவது, எந்தப் பலனையும் எதிர்பாராமல் மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக் கோளாகக் கொண்டு ம.தி.மு.க தொடர்ந்து பணியாற்றி வருகிறது. தமிழகம் உட்பட நாடு முழுவதும் ஊழல் லஞ்சம் போன்றவை பெரு கிவிட்டன. இவற்றிலிருந்து தமிழகத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழ னுக்கும் உண்டு.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப் படுகொலையை நிகழ்த்தியோரை சர்வ தேச நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டிக்க வேண் டும். இலங்கையில் துயரத்தில் சிக்கித் தவிக் கும் தமிழர்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக தமிழ் ஈழம் அமையும் .

எத்தனை எதிர்ப்புக்களை எதிர்கொண் டாலும் ம.தி.மு.க துவண்டுவிடாது. எங்களுடைய தன்னலமற்ற பணி தொடரும். தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாபெ ரும் அரசியல் சக்கதியாக ம.தி.மு.க உருவெடுக்கும் என்றார். (ஸ்ரீ)

# விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்பிற்கு ஐ.தே.க.ஆதரவு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்பு கோரிக்கைக்கு தமது கட்சி ஆதரவளிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்பு கோரிக்கை தொடர்பில் ஆராய ஐக்கிய தேசிய கட்சியால் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்த குழுவின் தலைவரான கபீர் ஹாசிம் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு அரசாங்கம் வழங்கிய வேதன உயர்வு இதுவரையிலும் நிறை வேற்றப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வாக்குறுதியை நிறைவேற்றாது தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பதிலேயே அரசாங்கம் ஆர்வங்காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் இலங்கையில் இலவச கல்வி முறை இல்லாது போகும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே தமது குழுவினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்கள் எதிர்வரும் நாட்களில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவராசா நாகரத்தினம் (பாக்கியம்)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அத்தியடி இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா நாகரத்தினம் நேற்று (07.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான ஞானம்மா, தையல், அருளம்பலம் மற்றும் மகேஸ்வரி(முத்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர் யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), விக்கினேஸ்வரன் (பொறியியலாளர் SEDCO நிறுவனம்), பிரணவ ஈஸ்வரன் (ஞானா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரகுநாதன் (கண்ணன்), நாகேஸ்வரி (ராணி), ஜெயகௌரி (வதனி), சிவாநந்தி, உருத்திரானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்ற கமலாதேவியின் மைத்துனியும், சர்மிலா, உமாகரன், சிவரூபன், ஜலஜா, கரிகரரூபன், சுதர்னாமேனி, கஜரூபன், சோபனா, சிவரூபன், பிரியங்கா, சாஜகி ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், தீப்சிஹா, அபிஷேக், அஜய்சேக், அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

T.P:-0214906730

தகவல்:
குடும்பத்தினர்.

(4886)

## தம்பிப்பிள்ளை ஈஸ்வரன் (வல்வெட்டி)



அரசடி வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறையைப்பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை ஈஸ்வரன் 06.05.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (இளைப்பாறிய உப அதிபர்), சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியினரின் அன்பு மகனும் சிவம் (சுவிஸ்), பரன் (சுவிஸ்), சுசிலா, லலிதா, ராதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்), கந்தசாமி, அமரர் தெய்வேந்திரம், சிவனேஸ்வரன் (அப்புராசா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரசடி வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

T.P:-0213735927

தகவல்:
குடும்பத்தினர்.

(சி.3167)

# பூநகரி உ.அ.அதிபர் பிரிவின் கலை இலக்கிய விழா

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கலை கலாசாரப் பேரவை எதிர்வரும் ஜூன் மாதத்தில் கலை இலக்கிய விழாவை நடத்துவதற்கும், பேரவையினால் சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்குமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

சஞ்சிகைக்கான ஆக்கங்களை இம் மாதம் முடிவிற்குள் கலாசார உத்தியோகத் தருக்கு அனுப்பி வைக்குமாறு பூநகரி உதவி அரச அதிபர் பிரிவு எல்லைக்குள் வசிப்பவர் களிடம் கோரப்பட்டுள்ளது. சிறுகதை, கட்டுரை, கவிதைத் துணுக்குகள், சரித்திர சம்பந்தமான ஆக்கங்கள் என படைப் பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட் டுள்ளன. (ஸ்ரீ-3-84)



யாழ்.கல்வி வலய ஆரம்ப தமிழ்த்தினப் போட்டி நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள் தமிழ்த்தாய் வணக்கப் பாடல் பாடுவதையும் யாழ். கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தடுப்புக்கைதிகளின் வழக்கு தாமதமானால் சிறைச்சாலைகளில் நெரிசல் அதிகரிக்கும்

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் சாதாரணமாக 26 ஆயிரம் கைதிகள் இருக்கின்றனர். அதில் 49.5 வீதமானோர் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். அவர்களின் வழக்கு தாமத மாகும் போது சிறைச்சாலைகளில் நெரிசல் நிலைமை அதிகரிக்கும் என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளில் 444 பேர் மேன்முறையீடு செய் துள்ளனர். அவர்களின் வழக்கை துரிதப் படுத்த வேண்டும் என்னும் அவர் கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு முன்னெடுக்கப்படும் போது மொழி பெயர்ப் பாளர்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சுட் டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜனநாயக தேசியக் கூட்டணியின் எம்.பி யான அஜித் குமார முன்வைத்த நீதித்துறை, பொலிஸ் மற்றும் சிறைச்சாலை ஆகிய வற்றை இணைத்து ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நியமித்தல் எனும் தனிநபர் பிரேரணைக்கு பதிலளித்து உர்ையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சிறைச்சாலை நீதி மற்றும் பொலிஸ் துறைகள் இணைந்தே செயற்பட வேண்டும். வழக்குகள் காலதாமதமடைவதை தடுப்ப தற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டம் விரைவில் திருத்தப்படும்.

தேங்கிக் கிடக்கும் வழக்குகளை துரிதப் படுத்துவதற்கு நீதிமன்ற கட்டமைப்பு விஸ் தரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட, மேல் நீதிமன் றம் உள்ளிட்ட நீதிமன்றங்களின் எண் ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் ஒழிப்பு, மதுவுக்கு முற் றுப்புள்ளி, பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவத னால் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் படுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டளவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளோரின் எண்ணிக்கை 4.15 வீதமாக வும் குற்றவாளிகளின் எண்ணிக்கை 8.2 வீத மாகவும் குறைந்துள்ளது.

சிறைச்சாலைக்கு போதைப்பொருள் பாவித்து விட்டு சிறைக்கு வருவோரின் எண் ணிக்கை 35 சதவீதமாகும்.

அதில் 50 சதவீதமானோர் மீண்டும் மீண்டும் வந்து போகின்றனர். சிறைச்சா லைக்கு வந்து செல்வதன் மூலம் குடும்ப பிரச்சினைகளும் ஏற்படும்.

சிறைச்சாலை வதைமுகாம் இல்லை. குற்றவியல் என்பது சிறைச்சாலையில் சம் பிரதாயமாக இருக்கின்றது.

அந்த கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்றார்.

(ஸ்ரீ-2)

# செயற்கை அறிவு கருத்துரை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதம் தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற வோரம் எனப்படும் கருத்து பரிமாற்ற கள நிகழ்வின் மே மாதத்திற்கான அமர்வு நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இல.128, டேவிட்வீதி, யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகி யல் கல்லூரியின் கருத்துரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன் போது ,கரித்தாஸ்-கியூடெக் நிறுவ னத்தின் நிர்வாக அலவலகர் ஆர்.ஏ.திலக ரட்ணம் தலைமையில் செயற்கை அறிவு என்னும் பொருளில் கருத்துப் பரிமாறல் இடம்பெறும்.

ஆங்கில மொழிசார் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் இவ்வமர்வில் ஆர்வ முள்ள அனைவரும் கலந்து கொள்ள முடி யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# அனுமதியின்றி யூஸ் விற்பனை செய்தோருக்கு அபராதம்

(அல்வாய்)

அல்வாய் பகுதியில் உரிய அதிகாரியின் அனுமதியின்றி யூஸ் விற்பனை செய்த மூன்று வியாபாரிகள் மீது அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதி வான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய் யப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் குற்றவாளியாகக் கண்டு மூவருக்கும் ஒன்பதாயிரம் ரூபா அப ராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3)

# கோத்தபாயவை குறுக்கு விசாரணை செய்த பிளேக்

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் மற்றும் பாது காப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு குறித்த தகவல்கள் தற்போது வெளியாகி யுள்ளன.

றொபேட் ஓ பிளேக் வன்னிக்கு விஜயம் செய்த பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்பு அமைச்சில் வைத்து சந்தித்துப் பேசியிருந்தார். இச்சந்திப்பின் போது இடம் பெற்ற கலந்துரையாடல்கள் குறித்து இரு தரப்பிலிருந்தும் கருத்துக்கள் வெளியிடப் படவில்லை.

இச்சந்திப்பின் போது றொபேட் ஓ பிளேக் குறுக்கு விசாரணை செய்வது போன்றே கோத்தபாயவிடம் கோத்தபாயவிடம் கேள்வி களை எழுப்பியுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

அத்துடன் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்படுத்த அமெரிக்கா முனைகிறதா என்று கலக்கத்தோடு றொபேட் ஓ பிளேக்கிடம் கோத் தபாய விசாரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.றொபேட் ஓ பிளேக்கிடம் இடம்பெற்ற சந்திப்பு குறித்து கோத்தபாய ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

வன்னிக்குச் சென்றிருந்த பிளேக்கிடம் அங்குள்ள மக்கள் போரினால் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய பின்பும் போதிய வேலைவாய்ப்பு இன்றி இருப்பதையே அடிப்ப டையான பிரச்சினைகளாக கூறியுள்ளனர் என்று கோத்தபாய தெரிவித்துள்ளார். அத்து டன் பிளேக்குடனான சந்திப்பு ஊக்கமளிப்பதா கவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி சிவராசா நாகரத்தினம்

(பாக்கியம்)

எமது நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரும் பொறியியலாளருமான திரு விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சிவராசா-நாகரத்தி னம் (பாக்கியம்) அவர்கள் 07.05.2011 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்க் காணிக் கையினைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.


#250, Temple Road,
Nallur, Jaffna.

யாழ். அலுவலர்கள்,
பணியாளர்கள்
Sewa Economic Development
Company (Pvt) Ltd. (SEDCO)

(4885)

# யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு போதியளவு உதவிகளை வழங்க வேண்டும்

## யாழ். ஆயர் தெரிவிப்பு



யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு போதியளவு உதவிகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென யாழ்ப்பாண பேராயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

15 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு முதல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வாழ்வதாகவும் இவர்களில் பெரும்பான்மையானவர்கள் கத்தோலிக்கர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் சொந்த இடங்களை பார்வையிடுவதற்கு அண்மையில் இராணுவத்தினர் அழைத்துச் சென்றதனை அடுத்து யாழ்ப்பாண பேராயர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் பெரும் அதிருப்தியுடன் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாத கிராமங்களில் மக்களை மீள்குடியேற்றுவது ஆபத்தானது என அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வடக்கு - கிழக்கில் பெரும்பாலான மருந்தகங்கள் பதிவு செய்யப்படவில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத சுமார் 275 மருந்தகங்கள் நாடு முழுவதும் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மருந்துப்பொருள் கொள்வனவின் தரம் குறித்து பாரிய சிக்கல் ஏற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தகைய மருந்தகங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வடமாகாணத்தில் அதிகபட்சமாக 77 மருந்தகங்கள் இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக கிழக்கு மாகாணத்தில் 65 மருந்தகங்களும் மேல் மாகாணத்தில் 41 மருந்தகங்களும் இதுவரை பதிவு செய்யப்படாமல் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை மூவாயிரத்து 172 மருந்தகங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# காணாமல் போன கடற்படையினர் தொடர்பில் இதுவரை தகவலில்லை

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து கடந்த மார்ச் மாதம் காணாமற்போன நான்கு கடற்படையினர் தொடர்பில் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப கடற்படையினர் காணாமல் போய் நேற்றுடன் 40 நாட்கள் ஆகின்றன. எனினும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

அத்துடன் கடற்படையையும் இச்சம்பவம் அதிரவைத்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் துரிதமான விசாரணைகளை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய விசேட குழுவுக்கும் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

நான்கு கடற்படைச் சிப்பாய்களும் வேறு நாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளனரா அல்லது இந்தச் சம்பவம் கடற்படையின் திட்டமிட்ட சதியா என பல தரப்பினரும் கேள்வி எழுப்புகின்றனர். இவர்கள் விபத்தில் சிக்குண்டு இறந்திருந்தால் இவர்களின் சடலங்கள் இலங்கை அல்லது இந்திய கடற்கரையில் ஒதுங்கியிருக்கும். ஆனால், அவர்களின் சடலங்கள் கரையொதுங்கவில்லை என இரு நாட்டு கடற்படையினரும் தெரிவிக்கின்றனர்.

ஒதுங்கிய சடலங்களும் இந்திய மீனவர்களுடையவை என அடையாளப்படுத்தப்பட்டது. சிலவேளை கடற்கொள்ளையர்கள் இவர்களை கடத்தியிருந்தால் கப்பம் பெறுவதற்காக அவர்கள் தகவல்களை கசிய விட்டிருப்பர். ஆனால், அப்படியான சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது.

எனவே, இந்தச் சம்பவமானது இலங்கை கடற்படையினரை மட்டுமல்ல ஒட்டு மொத்த இராணுவக் கட்டமைப்பையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான்கு கடற்படைச் சிப்பாய்கள் படகுடன் காணாமல் போனமை அறிந்ததே. இதனையடுத்து இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் அவர்கள் பயணித்த படகு எவ்வித சேதமுமின்றி வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# எதிர்க்கட்சி தலைவர் பூட்டான் பிரதமருடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பூட்டான் சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமர் ஜிக்மி டின்லியை சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் மேம்பாடு குறித்து நேற்று முன்தினம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தெற்காசிய பிராந்திய நாடுகளின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தனது பாரியாருடன் சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே வெளிவிவகார மற்றும் பொருளாதாரம் தொடர்பான அமைச்சர் கண்டு வங்கே ஹக்கினை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது பொருளாதார முறைமையினை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பூட்டானிய மன்னர் ஜிக்மி கேஷ நம்கியல் வங்சுங்கினை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# மரக்கறிகளை கொண்டு செல்ல பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தும் திட்டம்

## 15 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

மரக்கறிகளைக் கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிரிசேன தெரிவித்தார்.

போதியளவு பிளாஸ்டிக் கூடைகள் உற்பத்தி செய்யப்படாமை காரணமாக இந்தத் திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஒரு இலட்சம் பிளாஸ்டிக் கூடைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

எனினும் சட்டரீதியான முறையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் போதியளவு கூடைகள் உற்பத்தி செய்யப்பட்டதன் பின்னர் அதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

மரக்கறிகள் கொண்டு செல்லப்படும் போது உரிய பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக நாளாந்தம் பெருந்தொகையான மரக்கறிகள் விரயமாவதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிரிசேன குறிப்பிட்டார்.

இந்த நிலைமையை கவனத்தில் கொண்டே பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)


## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கை காப்புறுதித் துறையின்
முன்னோடியாகத் திகழும்
செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில்
கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு
நம்பிக்கையான இளைஞர்கள்
கோரப்படுகின்றார்கள்.




**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி**

தகைமை
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கல்வி பொதுத் தராதர சாதாரணதரம் (O/L) சித்தியடைந்திருக்க வேண்டும்.

**சிரேஷ்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி**

தகைமைகள்
- கல்வி பொதுத் தராதர உயர்தரம் (A/L) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- Marketing துறையில் முன் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

அடிப்படைச் சம்பளம், எரிபொருள் செலவு, கையடக்கத் தொலைபேசிச் செலவு, மருத்துவச் செலவு மற்றும் அடிப்படைச் சம்பளம் தவிர உங்கள் திறமையான சேவைக்கான ஊதியம் வழங்கப்படும்.



பரீட்சார்த்த நேர்முகத் தேர்வு
10.05.2011
(செவ்வாய்க்கிழமை)
நடைபெறும்.



இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

## செலிங்கோ காப்புறுதி நிறுவனம்

CEYLINCO VIP ON THE SPOT

இல.173, முதலாம் மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0773124603, 0773633145

(ஸ்ரீ-3132)

# தடைகளைத் தாண்டுமா ?

# காங்கேசன்துறை துறைமுகம்

உலகின் வளர்ந்துவரும் இரு பெரும் பொருளாதார சக்திகள் இந்தியா, சீனா. அந் நாடுகள் தன் நலன் சார்ந்து உதவி புரிந்தாலும் அதனை இலங்கை ஆக்கபூர்வமானதாக மாற்ற முடியும்.

இலங்கையின் தென் பகுதியில் அம்மாந்தோட்டை துறைமுகம் அதை சீனா பொறுப்பெடுத்து கட்டிக்கொடுத்தது. இந் நிலையில் தற்போது இந்திய அரசு வடக்கில் காங்கேசன் துறைமுகத்தை தான் பொறுப்பெடுத்து கட்டித்தருகிறேன் என வலியுறுத்தியது.

இதையடுத்து இலங்கை அரசும் இந்திய அரசின் உதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

விரைவில் இந்திய அரசாங்கத்துடன் இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப் படும் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படும் எனவும் காங்கேசன் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள்நிறைவடைந்த பின்னர் இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய பயன்படுத்தப்படும் எனவும்,

வடக்கிலிருந்து தெற்குக்கான பொருள்கள் மற்றும் பயணிகள் பரிமாற்றத்திற்கும் இத் துறைமுகம் பயன்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால் அதன் நன்மை பற்றி ஏற்றுமதி வல்லுநர் ஜெயந்த ரத்நாயக்க தெரிவிக்கையில்,

காங்கேசன் துறைமுக அபிவிருத்தி மூலம் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் நன்மை பெறுவார்கள். அது மட்டுமல்ல இதன் மூலம் வட மத்திய மாகாண அநுராதபுரம், பொலநறுவை மக்களுக்கும் நன்மையே. தற்போது வட பகுதிக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் 95 வீதத்திற்கும் மேற்பட்டவை கொழும்பு துறைமுகத்தின் ஊடாகவே கையாளப்படுகின்றன.

இந் நிலையில் காங்கேசன் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டால் இந் நிலை மாற்றமுறும். இதன் மூலம் இப் பிரதேசம் வளம் பெறும்.

இலங்கையின் பிரதான துறைமுகமான கொழும்பில் கையாளப் படும் பொருட்களில் 70 வீதமானவை இந்திய சரக்குகளே. இந் நிலையில் காங்கேசன் துறைமுகத்தின் மூலம் இந்திய–இலங்கை வர்த்தகத்தை கையாள முடியுமாயின் அதன் மூலம் பல வழிகளில் நன்மையுண்டு எனத் தெரிவித்தார்.

இதேவேளை இது குறித்து தந்திரோபாய கற்கை நிலையத்தைச் சேர்ந்த அனுஷ்கா விஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் காங்கேசன்துறை முக அபிவிருத்தியுடன் அயல் பிரதேசங்களில் கைத்தொழில் வலயங்களை, பூங்காக்களை அமைக்க வேண்டும் அச்சுவேலி கைத்தொழில் வலயம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

காங்கேசன் துறைமுக அபிவிருத்தி இலங்கையின் பொருளாதார கேந்திர நிலையமாக யாழ்ப்பாணம் மாற உதவக்கூடும் என்றார்.

சிங்கப்பூர், கொங்கொங் என்பன துறைமுகத்தை வைத்து வளர்ந்த நாடுகள் என்பது கவனிக்கத்தக்கது.




# இன்போசிஸ் தலைவராக கே.வி.காமத் நியமனம்

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் முன்னணியில் உள்ள இன்போசிஸ் நிறுவனத்தின் தலைவராக கே.வி.காமத் நியமிக்கப்பட்டுள்ளார். நிறுவனத்தின் தலைவராக உள்ள என்.ஆர்.நாரயணமூர்த்தி இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெறுகிறார். இதையடுத்து நிறுவனத் தலைவராக கே.வி. காமத் பொறுப்பேற்பார்.

இந்தியாவின் தனியார் வங்கிகளில் முதன்மையாக விளங்கும் ஐசிஐசிஐ வங்கியின் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர் கே.வி. காமத் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகஸ்ட் மாதம் 65 வயதை எட்டும் நாரயணமூர்த்தி இனி நிறுவனத்தின் கௌரவத் தலைவராக இருப்பார். இன்போசிஸ் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் 600 கோடி டொலர்களாகும்.

இன்போசிஸ் நிறுவனத்திற்கு அமெரிக்காவில் 64 அலுவலங்களும் 63 மேம்பாட்டு மையங்களும் உள்ளன. இவைதவிர இங்கிலாந்து, சீனா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் அலுவலகங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் மொத்தம் 1.30லட்சம் பேர் பணிபுரிகின்றனர்.

# எக்ஸ்போ லங்கா கோல்டிங்ஸ் நிறுவன ஆரம்ப பொது வழங்கல் மே 12-ம் திகதி

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங் லிமிட்டட் பொது பங்கு வெளியீடுகளை (IPO)ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் பிரதான அறிவிப்பு பலகையில் பட்டியலிடப்படுவதன் மூலம், மே 12ஆம் திகதி ஐ.பி.ஓ ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில்,172 மில்லியன் சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளை தலா ரூ.14 வீதம் எக்ஸ்போலங்கா ஹோல்டிங் வழங்குகிறது. இதன் மூலம் நிறுவனம் ரூ.2.4பில்லியன் மூலதனத்தை அதிகரித்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.



இது குறித்து நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீப் யூசுப் தெரிவிக்கையில், எக்ஸ்போ லங்காவிற்கு இது முக்கியமான தருணம். ஐ.பி.ஓ. மூலம் ரூ.2.4 பில்லியன்களை எட்டுவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

இதனை எங்களது பணி மூலதனத்தை விஸ்தரிப்பதற்கு, தொழிற்கூடங்களின் இயலுமையை பரவலாக்குவதற்கு மற்றும் எங்களுடைய நீண்டகால கடன்களை குறைப்பதற்கு போன்ற தேவைகளுக்காக பயன்படுத்தவுள்ளோம் என்றார்.

போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம், உற்பத்தி மற்றும் மூலோபாய முதலீட்டுத் துறைகள் என்பன போன்ற பல்வேறுபட்ட துறைகளில் இந்நிறுவனம் தொழில் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அத்துடன் 11 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 38 நகரங்களில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

அத்துடன் தேயிலை வர்த்தகம் விவசாய உற்பத்திகளிலும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அத்தியாவசியபண்டங்களின்முன்னணி இறக்குமதியாளராகவும் எக்ஸ்போ லங்கா செயற்பட்டு வருகிறது.

கருஞ்சீரக உற்பத்தி மற்றும் இலங்கையில் மீள்சுழற்சி செய்யப்படும் கழிவு காகிதங்களின் 19%ஆன முன்னணி சந்தைப் பங்குகளை கொண்ட நிறுவனமாக எக்ஸ்போ லங்கா திகழ்கிறது.

இந்நிறுவனம் சில மாதங்களுக்கு முன்பே பிரைவட் பிளஸ்மன்றில் 6 ரூபாய் வீதம் பங்களை வழங்கியமை கவனிக்கத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7356.97 | 7319.15 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6822.77 | 6736.88 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 10,863.33 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** அலுபப் (159.20),செரண்டிப் லான்ட் (2400.00), ரேடியன் ஜெம்ஸ்(115.30), சிங்கலங்கா (1385.00), மிரமர்(437.30).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** செரண்டிப் ஹோட்டல்ஸ்(X) (22.10),செரண்டிப் ஹோட்டல்ஸ்(32.40),போர்ட் லாண்ட்(87.30), என்வெ. றிசோஸ்(W) (41.20), ஓட்டோரோம்(901.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk




இலங்கையில் தனது 3.75G வலையமைப்பு சேவைகளை எடிசலாட் அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நாடு பூராகவும் இந்த வலையமைப்பு சேவையை தனது வாடிக்கையாளாரின் நலன்கருதி விஸ்தரிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த வலையமைப்பு அறிமுகத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் 3.75G HSPA+ அதிவேகமான 21mbps(செக்கனுக்கு மெகாபிட்ஸ்) இணைப்புகளை வடக்கு உட்பட நாடுமுழுவதும் பெற்றுக்கொள்ள முடியும் என எடிசலாட் அறிவித்துள்ளது இதை விளக்கும் செய்தியாளர் சந்திப்பை படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.99 | 110.67 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 178.07 | 182.25 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 157.72 | 162.08 |
| சுவிஸ் பிராங் | 124.06 | 128.47 |
| கனேடிய டொலர் | 112.12 | 115.81 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.80 | 119.64 |
| சிங்கப்பூர் டொலர் | 87.70 | 90.27 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.87 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறைவேற்று அதிகாரியாக கபில சந்திரசேன



ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் சிறிலங்கன் எயார்லைன்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கபில சந்திரசேன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது மிகின் லங்காவின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மைக்ரோசாப்ட் நிறுவன நிகரவருமானம் அதிகரிப்பு

மென்பொருள் தயாரிப்பு மற்றும் வர்த்தகத்தில் சர்வதேச அளவில் முன்னணியில் உள்ள மைக்ரோசாப்ட் கார்ப்பரேசன் நிறுவனம், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில் விற்பனை அதிகரித்து நிகரவருமானம் 31 சதவீதம் அதிகரித்து 5.23 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. மார்ச் 31-ம் திகதியுடன் முடிபடைந்த இந்தக் கால கட்டத்தில்,நிறுவன வருமானம் 13 சதவீதம் அதிகரித்து 16.43 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது என நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில், கணனி பயன்பாடு அதிகரித்திருப்பது இதன்மூலம் புலனாவதாக அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறுசீரமைப்பின் காரணமாக அதிரடி ஆட்குறைப்பில் நோக்கியா

மொபைல் போன் தயாரிப்பில் சர்வதே அளவில் முடிசூடா மன்னனாக விளங்கும் நோக்கியா நிறு வனம், மறுசீரமைப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அதன் காரணமாக ,2012-ம் ஆண்டிற்குள் சர்வதேச அளவில் 7 ஆயிரம் ஊழியர்கள் பணியிழக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நோக்கியா நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நோக்கியா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நோக்கியா நிறுவனம், சிம்பயான் மென்பொருள் பணிகளுக்காக முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான அசென்சருடன் கைகோர்த்துள்ளது. இதன்காரணமாக, சர்வதேச அளவில் பலர் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சென்னையில் அமைந்துள்ள நோக்கியா இந்தியா நிறுவனம் 50 கோடி மொபைல் போன் சாதனங்களை தயாரித்து சாதனை படைத்துள்ளது. 2006ஆம் ஆண்டு 28.50கோடி டொலர்களுடன்(ரூ.3 ஆயிரம் கோடி) தொடங்கப்பட்ட இந்நிறுவனம், விரைவில் 2 சிம் பொருத்தக்கூடிய கைத்தொலைபசிகளை அறிமுகப்படுத்தவுள்ளது என்றும் நோக்கியா இந்தியா நிறுவன இயக்குநர் பிரகாஷ் கடாமா தெரிவித்துள்ளார்.

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**தமிழாக்கம் தொடர் 07**

2006 ஆரம்பத்தில் இருந்து, இராணுவ நடவடிக்கைகள் பற்றி அறிக்கை விடுக்கும் ஊடகவியலாளர்களுக்கு மேலும் கட்டுப்படுத்தும் வழிகாட்டல்களை பாதுகாப்புச் செயலாளர் விடுத்ததோடு, நடவடிக்கைகளை எதிர்மாறாகச் சித்திரிப்பது ஒரு குற்றச் செயலாக ஆக்கப் பட்டது. பிரபல்யமான தாக்குதல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் உள்ளிட்ட ஊடகங்கள் மீதான மேலதிக தாக்கங்கள், அதிக அளவிலான சுய தணிக்கைக்கு வழிவகுத்தது.

இனங்காணப்படாத மூலங்களில் இருந்து உள்நாட்டு ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் விடுக்கப் பட்டதோடு, அதன் விளைவாக சிலர் நாட்டை விட்டுச் சென்றனர். விசா மறுத்தல் அதிகரிப்பு மற்றும் இரத்துச் செய்தல் சர்வதேசப் பணியாள் தொகுதியினர் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியதோடு, சில சந்தர்ப்பங்களில், அவர்கள் தம் நிலைமைகளை விட்டுக் கொடுக்கவேண்டியும் ஏற்படலாம்.

**(16)யுத்தத்தின் இறுதிக்கட்டங்களை நோக்கி...**

40. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களாக மாறுவதற்கான காட்சியை தோற்றுவிப்பதில் குறைந்தபட்சம் மூன்று மேலதிக காரணிகள் முக்கியமானவையாகும்.

41. முதலாவதாக இலங்கை அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ.யும் நோர்வேயை அனுசரணையாளர்களாகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொண்ட போது 2000 ஆம் ஆண்டில் குறுகிய காலப்பகுதியொன்றிலான சமாதானச் செயற்பாடு ஆரம்பித்தது. பெப்ரவரி 2002 இல் இருதரப்பினரும் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றிற்கு இணங்கியதோடு, நேரடிப்பேச்சுக்களை ஆரம்பிக்க முன்பதாக ஆண், பெண் பாகுபாடு பற்றிய உப குழுவென்றை நிறுவுவதன் மூலம் எல்.ரி.ரி.ஈ இன் பக்கத்திலிருந்து மற்றும் தெற்கிலிருந்து பெண்கள் கலந்துரையாடுதல் உள்ளிட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

டோக்கியோ இணைத்தலைமைகள் ஊடாக(ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் ஐக்கிய அமெரிக்கக்குடியரசு) அரசியல் முன்னேற்றத்தைக் கண்காணித்த மீளிணக்கப்பாடு மற்றும் அபிவிருத்தி பற்றிய டோக்கியோ மாநாட்டின் அடிப்படை யில்(2003) சர்வதேச சமூகம் இச் செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்கியது.

போர்நிறுத்த ஒப்பத்தந்தின் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன சர்வதேச அமைப்பான இலங்கைக் கண்காணிப்புத் தூதுக் குழு, அரசாங்கம் அதனைக் கலைத்து உத்தியோகபூர்வமாக போர்நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்த 2008 ஜனவரி வரை கள மீறல்களை கண்காணித்து வந்தது. ஏப்பிரல் 2003 இல் எல்.ரி.ரி.ஈ. ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்த ஒப்புந்தத்தை இரத்துச் செய்தது.

அதன்பின்னர் போர் நடவடிக்கைகள் 2006 இல் மீண்டும் ஆரம்பித்ததை தொடர்ந்தும் போர்நிறுத்த ஒப்பந்தம் பெரும்பாலும் பெயரளவில் மாத்திரம் இருந்தபோதிலும் அது தொடர்ந்தும் உத்தியோகபூர்வ ரீதியில் இருந்ததால் இலங்கைக் கண்காணிப்பு தூதுக்குழுவின் நடைமுறையிலான சர்வதேச பிரசன்னத்தை அது உறுதி செய்தது.



42.தொடர்ச்சியான இனவாதப் பிரிவு மற்றும் சகிப்புத்தன்மை இன்மை ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்ற இரு தரப்பினரிடையேயும் காணப்பட்ட தீவிரவாதப்போக்கு நீண்டகாலமாக இருந்து வந்த மோதலை தீர்ப்பதற்கான முன்னைய சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் பட்டியலில் இவ்வாறாக இந்தச் சமாதானச் செயற்பாட்டையும் விரைவில் சேர்த்து விட்டது.

கடும் தீவிரவாதப் போக்குடைய சிங்களத் தேசியவாதிகள் ஆரம்பத்திலிருந்தே போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை எதிர்த்தனர். மேலும், ஏப்ரல் 2003 இல் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய எல்.ரி.ரி.ஈ எடுத்த முடிவும் வடகிழ க்கில் இடைக்கால சுயாட்சி அதிகாரசபை ஒன்றை அமைப்பதற்கான அதன் ஒருதலைப்பட்சமான பிரேரணையும் சிங்கள தேசியவாத எதிர்ப்பினை மேலும் உக்கிரமடையச் செய்து, அரசியல் கட்சிகளின் ஆழமான தேசியக் கூட்டணியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை திடீரெனத் தோற்று வித்தது.

ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டணி தற்போதைய ஜனாதிபதியின் தலைமையின் கீழ் 2005 இல் நடைபெற்ற தேர்தல்களில் சுமாரான ஈட்டியதோடு, கேணல் கருணா என்றழைக்கப்படும் எல்.ரி.ரி.ஈ. இன் கிழக்குப்பகுதி தளபதி, விநாயகமூர்த்தி முரளிதரன், சுமார் 5000 போராளிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு எல்.ரி.ரி.ஈ இல் இருந்து பிரிந்து சென்றார். பின்னர் அவர் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி யொன்றான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள்(ரி.எம்.வி.பி) அமைப்பினை அமைத்து, அது துணைஇராணுவப் பிரிவொன்றைப் பேணும் அதே வேளையில், பதவியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் உறுப்பினராகச் சேர்ந்தார்.

இப்பிளவு எல்.ரி.ரி.ஈ இற்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. எல்.ரி.ரி.ஈ இன் தலைமைத்துவத்தில் கருணாவிற்கு இருக்கும் இடத்தைக் கவனிக்குமிடத்து, மிகவும் இரகசியமான இவ்வமைப்புப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவருக்கு இருந்ததோடு, இறுதியுத்தத்திற்குத் தயாராகும்போது அரசாங்கம் அதனைப் பயனுறு விதத்தில் பாவித்துக் கொண்டது.

மேலும் எல்.ரி.ரி.ஈ பற்றி அதிருப்தி கொண்டிருந்த ரி.எம்.வி.பி. யின் துணை இராணுவப்படைகள், அத்துடன் முன்னாள் தமிழ் போராளிக்குழுக்களின் உறுப்பினர்களை எல்.ரி.ரி.ஈ.இற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளிலும் தமிழ் பொதுமக்களுக்கு இடையே உளவு பார்க்கும் நடவடிக்கைகளிலும் அரசாங்கம் ஈடுபடுத்தியது.

44.மூன்றாவதாக சர்வதேச காரணிகளும் முக்கியமானவையாக இருந்தன. பயங்கரவாத அமைப்புக்களுக்கு மற்றும் அவர்களின் சர்வதேச வலைப்பின்னல்களுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கும் நாடுகளுடன் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தம் என்ற திட்டத்தின் ஓர் அங்கமாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் மேற்கத்திய அரசாங்கங்கள் ஒத்துழைப்பதற்காக எடுத்த முயற்சி எல்.ரி.ரி.ஈ.இற்குப் பாரிய விளைவுகளைக் கொண்டிருந்தது.

ஏற்கனவே பல நாடுகளால் பயங்கரவாத அமைப்பு என பட்டியலிடப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் மேலும் தனிமையாக்கப்பட்டு வந்தது. தமிழரான இலங்கையின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் 2005 இல் படுகொலை செய்ததானது, இவ்வமைப்பின் சர்வதேச பின்புலத்திற்கு இறுதியடியாக இருந்திருக்கலாம். இச்சூழலில் எல்.ரி.ரி.ஈ.இற்கு எதிரான அதன் இறுதித் தாக்குதலுக்காக இலங்கை அரசாங்கம் ஏனைய நாடுகளுடன் பங்காளர் உறவுகளை கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொண்டது.

45. 2005 ஆம் ஆண்டில் நடந்தேறிய தேர்தல்களின் பின்னர், போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைத் தாம் மதிக்கப்போவதாக அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. இனரும் உறுதியளித்த போதிலும், 2006 ஓகஸ்டில் மீண்டும் பாரியளவிலான ஆயுதம் தாங்கிய போராட்டம் ஆரம்பிக்கும் வரை இரு தரப்பினரும் தமது இராணுவச் சீண்டல்களைத் தொடர்ந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டில் இருந்த பல்லாயிரக் கணக்கான விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்கும் மாவிலாறு நீர்த்தேக்கத்தின் அணைக் கதவுகளை எல்.ரி.ரி.ஈ. மூடியதும் எல்.ரி.ரி.ஈ. இன் பிடியில் இருந்து கிழக்கு மாகாணத்தை மீட்பதற்காக ஆயிர க்கணக்கான படைவீரர்களை தாக்கு தல் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுத்தியது. கருணா பிரிவினரின் உதவியுடன் சுமார் இரு தசாப்தங்களின் பின்னர் முதற் தடவையாக 2007 ஜூலை மாதத்தில் அரசாங்கம் முழுமையாக கிழக்கு மாகாணத்தை தன் வசப்படுத்தியது.

46. கிழக்கு மாகாணத்தில் மற்றும் 2008 ஜனவரியில் வட மாகாணத்தின் சில பகுதிகளில் அரசாங்கப் படையினர் அடைந்த இராணுவ வெற்றி காரணமாக எல்.ரி.ரி.ஈ. வன்னிப் பிரதேசத்தில் மாத்திரம் பாரிய இடப்பரப்பை தன் ஆதிக்கத்தில் வைத்திருக்க முடிந்தது.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்தின் நான்கு மாவட்டங்களுள் தமது நடைமுறை தலைநகரான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்கள் எல்.ரி.ரி.ஈ. இன் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தன. வவுனியாவின் வட பகுதி, வடமேற்கு மன்னார் மற்றும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சிறிய நிலப்பரப்புகளையும் அது தன் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தது.

(தொடரும்)

# வடக்கின் அபிவிருத்திக்கென 86 மில்லியன் அமெ.டொலரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்காக 86 மில்லியன் அமெரிக்க டொலரை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது என வடமாகாண பிரதம செயலாளர் என். சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்காக மஹிந்த சிந்தனை தேசிய கொள்கைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கமநெகும உள்ளகப் பிரிவு கிராமிய மற்றும் சிறிய நகர அபிவிருத்தி உருவாக்கல் பிரிவினால் வடபகுதி மக்களுக்காக வழங்கப்படும் நிதியுதவி மூலம் உள்ளூர் சேவை மேம்பாட்டுத்திட்ட அமுலாக்கல் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை நீண்டகால எதிர்பார்ப்பாக இந்தத் திட்டம் காணப்பட்டது. அது தற்போது பூர்த்தியாகியுள்ளது.

13 பிரதேச சபைகளினாலும் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது.

ஒவ்வொரு பிரதேச சபைகளிலும் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக இத்திட்டங்கள் காணப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டத்திற்கென உலக வங்கியூடாக இந்த 86 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படுகிறது.

இதேவேளை, மக்கள் அதிகமாக வீதிகளையே திருத்தித் தருமாறு கேட்கின்றனர்.

எனவே, உள்ளூராட்சி மன்றங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனைவரும் உதவி புரிய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை வை.எம்.சி.ஏ. கச்சேரியடியிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரை சென்.சாள்ஸ் ஆரம்பப் பாடசாலையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ஐ.நா.நிபுணர்குழு கலைக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்த ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவை ஐ.நா. பொது செயலாளர் பான் கீ மூன் நேற்று முன்தினம் கலைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு தாருஸ்மான் தலைமையிலான மூவர் குழுவைக் கடந்த வருடம் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்திருந்தார்.

அக்குழுவின் அறிக்கை கடந்த ஏப்ரல் மாதம் முதலில் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அதன்பின் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் பொதுமக்களுக்காக வெளியிடப்பட்டது.

அவ்வாறான நிலையில் நிபுணர் குழுவின் செயற்பாடுகள் முற்றுப்பெற்றுள்ளதால் நேற்று முன்தினம் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் அதனைக் கலைத்துள்ளார். தன் பதவிக்காலம் முடிவதற்கிடையில் அவர் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்குரிய தகவல்களை அளித்தவர்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் இருபது வருடங்களுக்குள் வெளியிடக்கூடாது என்றும் நிபுணர் குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மானிய உர மோசடியாளர்களை கண்டுபிடிக்க திடீர் சோதனை

(கொழும்பு)

அரசாங்க மானிய உரத்தை மோசடியாக விற்பனை செய்கின்றவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய மோசடியில் ஈடுபடுகின்றவர்களைத் தேடி நேற்று முதல் திடீர் சோதனை மேற்கொள்வதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அனைத்து பயிர்களுக்காகவும் உரமானியம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதை அடுத்து உரமோசடிகள் குறைவடையும் என நம்புவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## திருக்கேதீஸ்வரத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கேதீஸ்வரம் திருத்தலத்தின் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை பஞ்சரத பவனியும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பாலாவித் திருக்குளத்தில் தீர்த்த திருவிழாவும் இடம்பெறும்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி ஊடாக செல்லும் மன்னார் போக்குவரத்து பேருந்துகள் யாவும் கோயில் வீதி வழியாகவே செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வர்த்தக மயமாக்கலினால் இலவச சுகாதார சேவை பாதிப்பு



### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வர்த்தக மயமாக்கலினால் இலவச சுகாதார சேவை பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக குடும்ப சுகாதார தினத்தை முன்னிட்டு கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்த கொண்டு உலையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பண்டரா நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த நிகழ்வு இடபெற்றது.


அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் போட்டி மிகுந்த சமூகத்தில் புதிய தொழில்நுட்பத்திற்கு மத்தியில் சுகாதார அமைச்சு கடமையாற்ற வேண்டியுள்ளாதாக சுட்டிக் காட்டினார். வர்த்தக மயமான சமூகத்துடன் வாழும் போது சுகாதார சேவை சில சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களின் ஆர்வம் மற்றும் முயற்சியின் காரணமாக அதிகளவான சவால்கள் வெற்றிகொள்ளப்படுவதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## விவசாயப் போதனாசிரியர் 13 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய அமைச்சினால் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம். கலாடின் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேற்படி 13 பேருக்கான நியம னக் கடிதங்களை வழங்கினார்.

இப்போதனாசிரியர்கள் மன்னார்,மடு , கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் மிகவிரைவில் நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜா மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

## 12 நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் உயர்ஸ்தானிகர்களை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

12 நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தப் புதிய நியமனங்களுக்கான பெயர்களுக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொதுசன தொடர்புகளுக்கான பணிப்பாளர் நாயகம் சரத் திசாநாயக்க குறிப்பிட்டார்.

நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், லெபனான், ஓமான், குவைத், கென்யா, சீனா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கான புதிய இராஜதந்திர அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த ஒரு சில வாரங்களுக்குள் அவர்கள் அந்தந்த நாடுகளில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொதுசன தொடர்புகளுக்கான பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### நானிலத்தில் யாருளரோ?

பெற்றெடுத்த அன்னையவள்
பேரன்புக்கீடாக
நற்கருமம் ஆற்றுதற்கு
நானிலத்தில் யாருளரோ?
பத்து மாதம் சுமந்து
பத்தியமாய்த் தானிருந்து
சித்தமெலாம் குளிர
சீர்தனை ஈபவள் யார்?
கட்டித் தழுவி நிதம்
கனக முலை தானீர்ந்து
கொட்டிக் குருதியதை
குணமாக ஈபவளே!
மழலைச் சிரிப்பினிலே
மனதையே பறிகொடுத்து
குழைந்து குதூகலிக்கும்
குணமார்ந்த அன்னையவள்
அன்னையே தெய்வமாக
அகிலமே போற்றியேத்தும்
தன்னலமில்லாத் தாய்க்கு
தரணியே தலைவணங்கும்

கூத்தாடி வி.வி.குஞ்சிதபாதம்

### பயணம்

நாட்கள் நகர்ந்திடும்
கனவுகள் நனவாகிடும்
கவிதைகள் சுமையாகிவிடும்
இழப்புகள் வழமையாகிவிடும்
பிரிவுகள் நிரந்தரமாகிவிடும்
வேதனைகள் சாதனையாகிவிடும்
நினைவுகள் பசுமையாகிவிடும்
வினாக்கள் விடை கண்டிடும்
கண்களின் தேடல்கள் தீர்ந்திடும்
ஏக்கங்கள் தவிப்புகள் குறையும்
வாழ்க்கைப் பாதை புரிந்திடும்
நம் பயணங்கள்
தொடர்ந்திடும்...

தீபா பத்மநாதன்
யாழ.தேசியக் கல்வியற் கல்லூரி.

### கல்வி

உனக்காகத்தான் என் தேடல்
உனக்காகத்தான் என் பிறப்பு
உன்னை அகங்கொள்ளும்
நொடிகளுக்காக
சில ஆயிரம் தடவையாவது முயன்று
ஒருமுறை சாதிப்பதற்கு...

சி.ஷாந்தினி
விசுவமடு.

### அவரவர் பார்வையில்

#### தன்னம்பிக்கை

தோல்விகள் என்பது
உன்னைத் தூங்க வைக்க
பாடும் தாலாட்டு அல்ல
நீ நிமிர்ந்து நிற்பதற்கான
தேசிய கீதம்!

#### வாழ்க்கை

மனித இதயம் ஒரு
காகிதம் போன்றது – அதில்
கவிதை எழுதிய கைகளைவிட
கசக்கிய கைகளே அதிகம்

#### நான்

எத்தனை துன்பம் வந்தாலும்
தடைகள் வந்தாலும்
எனக்கு கவலை இல்லை
ஏனென்றால் – நான்
நூறு முறை வென்றவனல்ல...

ந.கீர்த்தனா
சுன்னாகம்.

### பிறழ்வு

கலாசாரக் கருவறையில்
உற்பத்தியாகிறது கண்ணீர் முட்கள்
கட்டிக் காக்கப்பட்ட சந்ததியின்
சரித்திரங்கள்
சமாதியாகிப் போனது
சம்பிரதாயம் சகதிக்குள்
அடைக்கப்பட்டு சந்ததிகளில்
வன்முறைச் சந்ததி
வெள்ளோட்டம் பழகிறது
தொலைபேசியும்
இணையமும்
தவறானவர்களிடம் கைகோர்த்து
தீயதை வட்டியாக்குகிறது
மயக்கநிலையில் வைத்து
மதுவும் மாதுவும்
மனங்களிடம் போட்டி போடுகிறது
பிரபஞ்சப் பண்பாட்டு
நெரிசல்களில் சிக்குண்டு
தமிழினமோ தரங்கெட்டுப் போனது...

ஜெ.எஸ்.ராஜ்
யாழ்.பல்கலைக்கழகம்

### இமயம் தொட...

ஓடினால்தான் ஆறு
ஓரிடத்தில் நின்றால்
அது குளம்
ஆறாது நீ ஆறாகுவாயோ?
அயர்ந்து ஓரிடத்திலே
குளமாகுவாயோ?
ஆறாது ஓடு ஆறாவாய்
ஓடும் நீர்தான்
புனிதமாகிறது

மாவை. நா.கஜேந்திரா

### விடியல்


உன் கண்ணில் கலக்கம்
தெரிகின்றது
உன் எண்ணமும்
எனக்குப் புரிகிறது
உன் பயணப் பாதைகள்
அதிக தூரமில்லை
எழுந்து வா
விடியலதைப் படைப்போம்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### நிலைத்திருக்குமா?

நம்பிக்கை என்பது
உறவுக்கிடையே உருவாகும்
தூய்மையான நட்பின் அடையாளம்
அதுவே சிலவேளையில் பொய்யாகும்
போது நட்பு மட்டும் நிலைத்திருக்குமா?

லேகா, ஈச்சமோட்டை.



## மௌனத்தின் தேடல் – 69

### உதவி

உயிரை மீட்க
உதவும் கரங்கள்
உன்னதமான
உயிர்க்கரங்கள்

க.தங்கலீலா, கரவெட்டி

### உவகை

தாய் தாழ்ந்தால் மட்டும்
மீட்பவன் மனிதனல்ல
நாய் வீழ்ந்தாலும் மீட்பவனே
நல்மனிதன்

ய.சங்கீதா, பருத்தித்துறை

### நன்றி மறவாமை

நன்றியின் வித்து
நடுங்கிடும் போது
நலமுடன் காக்க
அண்டியே சேர்ந்து
அடைக்கலம் கொடுப்பர்.

வி.கிஷோர், யாழ்ப்பாணம்.

### தலைமை

நல் உள்ளம் கொண்ட
இச்சிறுவர்களே
நாளைய உலகின்
தலைவர்கள்
நடை போடுங்கள்
நல்வழி நோக்கி
நாயகராவீர்.

ப.பிரசாத் பூநகரி.

### உத்தமபுத்திரர்

தெருநாய்தானேயென்று
கல்லெறியும் மனிதருண்டு
கைகொடுக்கும் மனிதர்களைப்
பார்த்ததில்லை
உயிரொன்றை மதித்து
உவகையுடன்
கைகொடுக்கும் நீங்கள்
உத்தமர்களே!

எம்.சந்திரகலா
யோகபுரம்.

### உபதேசம்

மனிதா நான் நினைத்தேன்
எனக்கிந்த வாழ்வே வேண்டாமென
ஆனால் இந்தப் பிஞ்சு மனதைப்
பார்த்தவுடன் உலகில்
வாழ்வது பற்றிப் புரிகிறது

நி.சாரங்கா
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### மீளுமா?

தத்தளிக்கும் தமிழினத்தை
சர்வதேசம் மீண்டளிக்குமா?
இல்லை மீளழிக்குமா?

பொ.சிந்துஜன்
பருத்தித்துறை.

### வழிகாட்டிகள்

வழி தவறிப்போகும்
இன்றைய
இளைஞர் மத்தியில்
அன்புக்கு வழிகாட்டியாக
இவர்கள் இங்கே!

பொ.சாம்பகி, பருத்தித்துறை

### மனிதத்துவம்

கலியுகத்தில்
மனிதத்துவத்தின்
வெளிப்பாடு
இனங்களைத் தாண்டி
பாசக்கயிறு வழி தொடர்கிறது

புலோலியூர் இனியன்

### ஏக்கம்

வீழ்ந்துவிட்ட தமிழினத்தை
சூழ்ந்துவிட்ட துயர் துடைக்க
துடிக்கும் உள்ளத்தை
பிடிக்க ஏங்கும் மனங்கள்

ஜெ.லெசி, பருத்தித்துறை

### யாருமில்லை

வாழ்வாதாரம்
யாவையும் இழந்து
பள்ளத்தில் வீழ்ந்து
உள்ளம் நொந்து வாழும்
தமிழருக்கு
கைகொடுக்க யாருமில்லை

இ.ஆராதனா
மட்டுவில்.

### ஜீவன்

இரக்கமற்ற காடையர்களுக்கு
மலிந்துபோனது
மனித மரணம்
ஆனாலும்
இரக்கமுள்ள மானுடனுக்கு
ஐந்தறிவு ஜீவனும்
உயிரெனப்பட்டதே

பொ.ஞானகலை, பருத்தித்துறை


### மனிதம்

வெள்ளத்தில் வீழ்ந்து
வெளியேறத் துடிக்கும்
நாயின் உயிர் காக்க
உள்ளத் துடிப்போடு
உழைக்கும் இளைஞரின்
கருணை உள்ளம் வாழ்க

துரை, மட்டுவில்.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 70

அன்பு வாசகர்களே !



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.05.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?




(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் வரை)

"சேமிப்பு உயரும் இமயம் போல்,
தேசம் போற்றும் வாழ்வமையும்!"

பிறருக்கு சேவை செய்வதில், தனக்கு நிகர் யாருமில்லை என்பதை நிரூபித்துக் காட்டும் தனுசு இராசி நேயர்களே!

எளிய தோற்றத்துடன் விளங்கும் நீங்கள், ஏதேனும் லட்சியத்துடன் செயல்படுவீர்கள். எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதில் முக்கியத்துவமும், முதன்மையும் வகிப்பீர்கள். சாமர்த்தியமாகப் பேசி, சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு நிறைய உண்டு.

தெய்வபக்தி மிக்க நீங்கள், தேசபக்தியும் மிக்கவர்களாக விளங்குவீர்கள். உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி உன்னதமான பெயர்ச்சியாக அமையப்போகிறது. குருவின் பரிபூரணமான பார்வை உங்கள் இராசியில் பதியப் போகிறது.

மற்ற இராசியை குரு பார்ப்பதற்கும், உங்கள் இராசியைப் பார்ப்பதற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. உங்களுக்கு இராசிநாதனாக அமைந்த குருவே உங்கள் ராசியைப் பார்ப்பது மிகுந்த யோகம்தான். காரகன் தன் பாவத்தையே பார்த்தால், அந்த பாவத்திற்கு எந்த தோஷங்களும் கிடையாது என்று சொல்வார்கள். அதுவும் ஒன்பதாம் பார்வையாகப் பார்ப்பதால் பொன், பொருட்கள் பெருகி, புகழும் பெருகும் நேரமாக அமையப்போகிறது.

**ஆதாயங்களை அதிகரிக்கும் குருப்பெயர்ச்சி**

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு, இதுவரை நான்காமிடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 08.05.2011 முதல் ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து அதன் அற்புதப் பார்வையை உங்கள் இராசியில் வழங்கப் போகிறார். அதன் பலனால், ஆதாயங்கள் அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

உங்கள் இராசிநாதன் எல்லா கிரகங்களையும் பார்ப்பதன் மூலம் பலன் கொடுப்பவர். மற்ற கிரகங்களுக்கு இல்லாத மகத்துவம் உங்கள் ராசிநாதனுக்கு உண்டு. அப்படிப்பட்ட குரு புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், பிள்ளைகளாலும் குடும்ப உறுப்பினர்களாலும் பெருமைகளைக் கொண்டு வந்து சேர்க்கும்.

பூர்வ புண்ணியத்தினால் உங்களுக்கு என்னென்ன பலன்கள் கிடைக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் இப்பொழுதுதான் உங்களுக்கு வழங்கப் போகிறார். இதுவரை எதை எதையெல்லாம் எதிர்பார்த்து காத்திருந்தீர்களோ அவைகளை எல்லாம் வழங்க ஆயத்தமாக இருக்கிறார்.

ஆனால், அப்படிப்பட்ட குருவை நீங்கள் வரவேற்றுக் கொண்டாட, வழி மீது விழி வைத்து காத்திருக்க வேண்டும். வரும் முன்னதாகவே அதற்குரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும். "வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே! உன்னை தேனான சொல்லெடுத்து செவிகுளிரப் போற்றுகின்றேன்" என்ற குரு கவசத்தை சந்நிதியில் பாடுங்கள். சந்தோஷங்கள் வந்து சேரும்.

"ஐந்தினில் குருதான் வந்தால்,
அனைத்திலும் வெற்றி கிட்டும்!
பைதனில் பணமும் சேரும்
பாராளும் யோகம் வாய்க்கும்!
வையகம் போற்றும் வண்ணம்
வாழ்க்கையும் அமையும் உண்மை.
செய்தொழில் வளர்ச்சியாகும்
செல்வாக்கும் அதிகரிக்கும்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்த்தால், ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு உங்களுக்கு அனைத்து வழிகளிலும் வெற்றியைக் கொடுக்கப் போகிறார். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். கொடுக்கல் - வாங்கல்கள் சீராகும்.

உன்னதமான குருவின் ஆதிக்கம் உங்களின் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டுமானால், நல்ல இடங்களில் சஞ்சரிக்க வேண்டும். மனிதர்கள் எப்படி நல்லவர்களுடன் சேர்ந்தால், நல்ல காரியங்களை அடுக்கடுக்காக செய்வார்களோ, அதைப் போல, குருவும் எந்த இடத்தில் யார் யாரோடு எல்லாம் இணைந்து சஞ்சரிக்கிறாரோ அவர்களுக்கெல்லாம் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார்.

உங்கள் இராசிப்படி நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் குரு அமைவதால் சுக ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் அந்த இடத்திற்கும் பலன் கிடைக்கும். எனவே, சுகங்கள் அதிகரிக்கும். நடந்து சென்றவர்கள், இனி வாகனத்தில் செல்லக் கூடிய வாய்ப்பு உருவாகும். இருசக்கர வாகனம் வைத்திருப்போர், நான்கு சக்கர வாகனங்கள் வாங்குமளவிற்கு மேலும் வளர்ச்சி கூடும்.

தாயின் உடல் நலம் சீராகும். தக்கவிதத்தில் இடம், பூமியாலும் இலாபம் கிடைக்கும். முன்னோர் வழிபாட்டையும் நீங்கள் முறையாக மேற்கொண்டால், முன்னேற்றங்கள் வந்து சேரும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

நவக்கிரகங்களில் நன்மை தரும் கிரகம் என்று வர்ணிக்கப்படும் குரு இப்பொழுது நான்காமிடத்தில் இருந்து ஐந்தாம் இடத்திற்கு சஞ்சரித்து உங்கள் இராசியை ஒன்பதாம் பார்வையாக பார்க்கப் போகிறார். "அஞ்சும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்" என்பது பழமொழி. அதன்படி, அதன்பார்வை பதியும் இடங்களான ஜென்மம் மற்றும் ஒன்பது, பதினொன்று ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

எனவே, நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் மாறும். உடல் நலத்திற்காக செலவிட்ட தொகை இனி குறையும். கருத்து வேறுபாடுகள் அகலும். கனிவோடு பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும்.

இதுவரை செய்த முயற்சிகளில் இருந்து தடைகள் அகல புதிய வழி தோன்றும். சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றும் நல்ல முடிவிற்குவரும்.

மனக்கவலை மாறும். மதிப்பும், மரியாதையும் கூடும். இனத்தார் பகை அகலும். எல்லா வழிகளிலும் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எப்போது நடக்குமோ என்று ஏங்கிய காரியம் இப்பொழுது நடக்கும். காலம், காலமாக நடைபெறாத காரியங்களெல்லாம் இப்பொழுது நடைபெறுவது கண்டு ஊரார் வியப்பர். அதிர்ஷ்டசாலி என்ற பட்டத்தை உங்களுக்கு வழங்கி உங்கள் சொல்லை ஆமோதிப்பர்.

மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும் நேரமிது. கூட்டு முயற்சிகளை விட்டு இனி தனி முயற்சிகளை மேற்கொள்வீர்கள். கொள்கைப் பிடிப்பை தளர்த்திக் கொள்ளாமலேயே இனி காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். பகையாகப் போனவர்கள் உறவாக மாறுவர். நகை, நட்டு என்றும், தோட்டம், துறவு என்றும் வீடு வாசல் என்றும் வாங்கிச் சேர்ப்பீர்கள்.

இலாப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், தொழில் முன்னேற்றம் கூடும். மூடிக்கிடந்த தொழிலை மீண்டும் திறக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உயர்ந்த நிலையை அடைய சந்தர்ப்பங்கள் தேடி வரும். அழைப்பு மணி அடித்தவுடன் ஓடிவர ஆட்கள் காத்திருப்பர். களைப்பு விலகும். காசு, பணம் குவியும். அந்நிய தேசப் பயணத்தில் அதிக ஆர்வம் காட்டும் நேரமிது. புண்ணிய காரியங்களிலும் மனதைச் செலுத்துவீர்கள்.

புகழ் மிக்கவர்களாக நீங்கள் மாறுவதற்கு வழி பிறக்கும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி தரும். சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சூழ்நிலை அமையும். பூர்வீக சொத்துக்கள் கிடைத்து அதில் புதிய வீடு கட்டும் அமைப்பு உருவாகலாம். சேமிப்புகள் உயரும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

மேஷ ராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிநாதனாகவும், நான்காமிடத்திற்கு அதிபதியாகவும், குரு விளங்குவதால், உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரமாக இந்த நேரம் அமையும். மருத்துவச் செலவுகள் கூடும். ஏதேனும் ஒரு சிறு தொல்லைகள் வந்தாலும், உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறும். பூமியோகம் கிடைப்பது போல் தோன்றினாலும் கிட்டச்சென்றால் எட்டச்செல்லும். வாங்க நினைத்த இடத்தையோ, வீட்டையோ வாங்க இயலாமல் பத்திரப் பதிவில் குழப்பங்கள் ஏற்படலாம். வாகனமாற்றச் சிந்தனை மேலோங்கும்.



நாடுவிட்டு நாடுசென்றவர்கள் நல்லவேலை கிடைக்கவில்லையே இனி தாய்நாட்டிற்குச் செல்லலாமா என்று சிந்திப்பர். இக்காலத்தை பொற்காலமாக்குவது வழிபாடுகள் தான். வியாபாரத்தில் கூட விழிப்புணர்ச்சி தேவை எதிரிகளின் ஏமாற்றத்திற்கு ஆளாக நேரிடலாம். உதிரி வருமாணங்களுக்காக ஒருசில வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கப் போய் நிரந்தர வருமானமும் நிலையில்லாமல் போகலாம். எனவே இருப்பதைக்கொண்டு நிம்மதியாக வாழவேண்டிய நேரமிது.

"தக்கவிதத்தில் வரவுவரும்!
தடுமாற்றங்கள இனிக்குறையும்!."

இந்தக்குருபெயர்ச்சியால் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றிகிடைக்கும். நல்லபலன்களை நீங்கள் நாளும் எதிர்பார்க்கலாம். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். சிக்கல்கள் விலகும். சிரமங்கள் குறையும். குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும் கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த பொருட்களை வாங்கவேண்டும் என்ற ஆசை செப்ரம்பர் மாதத்திற்கு மேல் நிறைவேறும் கல்யாணக் கனவுகள் நனவாகும். சுயஜாதகரீதியாக குரு இருக்கும் பாதசார பலமறிந்து பரிகாரங்களை மேற்கொண்டால் மேலும் நண்பர்களைப் பெறலாம்.

வியாழன் தோறும் குருவை வழிபட்டு வருவதோடு அம்மன், நலம் தரும் குரு ஆகியவற்றையும் வழிபட்டு வாருங்கள். *(தொடரும்)*

**சிவல்புரி சிங்காரம்**

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்காக மஹிந்த சிந்தனை தேசிய கொள்கைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உருவாக்கல் பிரிவினால் வடபகுதி மக்களுக்காக வழங்கப்படும் நிதியுதவி மூலம் உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்ட அமுலாக்கல் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கான நியமனக் கடிதங்களை பிரதேச சபைச் செயலாளர்களிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

## போலிக்கடனட்டை மோசடியில் ஈடுபட்ட குழுவினர் கைது

(கொழும்பு)

போலிக் கடன் அட்டைகள் மூலம் மோசடியாகப் பணம் சுருட்டி வந்த மட்டக்களப்பு பொறியியலாளர் ஒருவர் தலைமையிலான குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக மட்டக்களப்பைச் சேர்ந்த தரன் எனும் தமிழ் பொறியியலாளர் ஒருவர் செயற்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் கணனித்துறையில் பொறியியல் பட்டம் பெற்றுள்ள அவர் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மன் உள்ளிட்ட பல நாடுகளில் வசிக்கும் தன் நண்பர்களுடன் கூட்டு வலையமைப் பொன்றை மேற்கொண்டு போலிக் கடனட்டைகள் மூலமாக பெருந் தொகைப் பணத்தை மோசடி செய்துள்ளார்.

வெளிநாட்டவர்களின் கடனட்டைத் தகவல்களைப் பெறுவதற்காக இணையத்தளம் ஒன்றுக்கும் உள்நாட்டவர்களின் கடனட்டைத் தகவல்களுக்காக எரிபொருள் நிரப்பும் நிலைய ஊழியர்கள் பலருக்கும் அவர் பெரும் தொகைப் பணத்தை மாதா மாதம் கொடுத்து வந்துள்ளது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திருட்டுத்தனமாக பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனட்டைகளில் தகவல்களைக் கொண்டு போலிக் கடனட்டைகளை உருவாக்குவதற்காக கனடா மற்றும் இந்தியாவிலிருந்து இரண்டு இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவருக்கு உதவியாகச் செயற்பட்ட ஒரு தமிழர், மூன்று முஸ்லிம்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரஸ்தாப மோசடிக்கும்பலுக்கு கடனட்டைகளின் தகவல்களைத் திருடி வழங்கிய எரிபொருள் நிலையங்களின் ஊழியர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஶ்ரீ-2)

## பயங்கரவாத செயற்பாடுகளுக்கான நிதியுதவிகளை தடுப்பது குறித்து ஆராயும் விசேட மாநாடு

(கொழும்பு)

பயங்கரவாத செயற்பாடுகளுக்கான நிதியுதவிகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட மாநாடு எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த பிரதம நீதியரசர்கள் உள்ளிட்ட 30 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக பிரதம நீதியரசர் அசோக டி சில்வா குறிப்பிட்டார்.

பொதுநலவாய நாடுகள் மற்றும் இலங்கை உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றுதல் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கான அழுத்தங்கள் ஆகியன தொடர்பில் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அநேகமான நாடுகளின் பிரதம நீதியரசர்களும் மாநாட்டில் கலந்து கொள்கின்றமை இந்த சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு மிக முக்கிய ஒன்றாக அமையும் என்று பிரதம நீதியரசர் அசோக டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

## நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் ஆயிரத்து ஐநூறு சீன ஊழியர்கள்

நுரைச்சோலை அனல்மின்நிலையத்தில் இலங்கை ஊழியர்களுடன் சுமார் ஆயிரத்து 500சீன ஊழியர்கள் பணியாற்றுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மேற்படி மின்நிலையத்தின் முதல் கட்டடத்திற்காக உள் நாட்டில் 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறப்பட்டதாகவும் சீனாவிலிருந்து 455 மில்லியன் டொலர்கள் சீனாவிலிருந்து பெறப்பட்டதாகவும் அவர் கூறினார். இரண்டாவது கட்டத்திற்காக இலங்கையிலிருந்து 11 ஆயிரம் மில்லியன் ரூபாவும் சீனாவிலிருந்து 819 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணா நாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இத்தகவல்களை தெரிவித்தார். (ஶ்ரீ-2)

2011.05 08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1450-இங்கிலாந்தில் கெனட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம்பெற்றது.

★ 1821- கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ 1886-ஜோன் பெம்பர்ட்டன் கொக்கக்கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டு பிடித்தார்.

★ 1902- கரிபியன் மார்டீனிக் தீவில் பெலே எரிமலை வெடித்ததில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1914-பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1933-மகாத்மாகாந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21 நாட்கள் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.

★ 1942- இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1945- அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக் கணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தன.

★ 1984- லொஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பகிஷ்கரிக்கப் போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித் தது.

★ 2007- புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1828-ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் (இ.1910)

★ 1916-சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆன்மீகவாதி (இ.1993)

### இறப்புக்கள்

★ 1947- றொபேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1951-மு.நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

இன்று உலக செஞ்சிலுவை தினம்

COMITE INTERNATIONAL GENEVE ICRC

# வடபகுதி அபிவிருத்திக்கு அரசாங்கம் பாரியளவு நிதியுதவி

## உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்பு அரசாங்கத்தால் வடபகுதி அபிவிருத்திக்கென பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மேம்படுத்துவதற்காக மஹிந்த சிந்தனை தேசிய கொள்கைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கமநெகும உள்ளகப் பிரிவு கிராமிய மற்றும் சிறிய நகர அபிவிருத்தி உருவாக்கல் பிரிவினால் வடபகுதி மக்களுக்காக வழங்கப்படும் நிதியுதவி மூலம் உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்ட அமுலாக்கல் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணம் யுத்த அழிவுகளை அதிகமாக எதிர்கொண்டிருந்த நிலையில் அதன் மீளெழுச்சி நடவடிக்கைகள் தற்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக யுத்தத்தால் அழிவடைந்த கட்டுமானங்கள் அனைத்தையும் புனர்நிர்மாணம் செய்யும் பணியில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபடுகிறது.

இதற்கென உலக வங்கியிடமும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் அரசாங்கம் பாரியளவு நிதியைக் கடனாகப் பெற்றுள்ளது.

மேலும் போரினால் செயலிழந்து இருக்கும் பிரதேச சபைகள் மீளெழுந்து தமது பணிகளை மேற்கொள்ளவும் அரசாங்கம் நிதியுதவி வழங்குகிறது. இதன் ஒரு கட்டமாகவே இந்த நிகழ்வு அமைகிறது.

மனிதவள செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து வடமாகாணத்தைப் பாரிய அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## இறுவட்டு வெளியீட்டு விழா

நீர்வேலி வடக்கு அருள்மிகு காமாட்சி அம்பாள் ஆலய வளர்ச்சி நிதிக்காக மாவையூர், நீர்வையூர் இளைஞர்கள் இணைந்து வெளியீடு செய்யும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து மற்றும் சம்பூரண அரிச்சந்திரா இசைநாடக ஒலி, ஒளிப்பேழை இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மணிமண்டபத்தில் தலைவர் சமூகசோதி த.பரராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்துசிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வாழ்த்துரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார். நூல் வெளியீடும் வெளியீட்டு உரையும் கலாபூசணம், வில்லிசை வேந்தன் க.நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) நிகழ்த்தவுள்ளார். முதற்பிரதியை மனிதநேய ஈகையாளன் கல்விக் காருண்யன் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பெறவுள்ளார். (ஸ்ரீ-3)

## சிறைக்குள்ளிருந்தபடியே கப்பம் அறவிடும் செயற்பாடு அரங்கேற்றம்

### பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைக்குள்ளிருந்தபடியே கப்பம் அறவிடும் செயற்பாடுகளை மேற்கொண்ட இரண்டு கைதிகளின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொலைபேசி வாயிலாக வர்த்தகர்களை மிரட்டி, கப்பமாக அறவிடப்படும் பணம் வைப்புச் செய்யப்படும் சந்தேகத்திற்கிடமான இரண்டு வங்கிக் கணக்குகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொலிஸார் நீதிமன்றத்தின் உத்தரவை நாடியிருந்தனர்.

அதன்போதே பிரஸ்தாப வங்கிக் கணக்குகள் இரண்டும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இரண்டு கைதிகளுக்குரியவை என்பது தெரியவந்துள்ளது. சிறைக்குள்ளிருந்தபடியே அவர்கள் கைத்தொலைபேசி ஊடாக கப்பம் அறிவிடும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்தின் ஊடாக நேற்று முன்தினம் இரகசியப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் புத்தாண்டு சமூகப்பணி வைபவம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம் நடாத்தும் புத்தாண்டுச் சமூகப்பணி வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கோப்பாய் வீரபத்திரர் கோவிலடியில் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத் தலைவர் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரத[illegible]ம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பண[illegible]ப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

ஆசியுரையை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் பேச்சு, குழு நடனம், இன்னிசை அரங்கு, சிறப்புப் பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்வுகளும் முன்பள்ளி மாணவர்களுக்குப் பரிசில் வழங்கல், நலிவுற்ற மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2)

## தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையிலேயே அரிசி மற்றும் கோதுமைமாவிற்கு விலையுயர்வு

### உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிராந்தியத்தில் அரிசி, கோதுமைமாவிற்கான விலை இலங்கையில் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

தெற்காசிய பிராந்திய வலயத்தில் ஒப்பீட்டளவில் இலங்கையில் அரிசி மற்றும் கோதுமை மாவிற்கான விலை உயர்வாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் அரிசியின் விலை 30 வீதத்தினாலும் கோதுமைமாவின் விலை 26 வீதத்தினாலும் உயர்வடைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நாட்டில் ஏற்பட்டிருந்த மோசமான காலநிலையினால் நெல் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டதனால் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த கால அரசாங்கங்களின் விலைக் கொள்கை, உலக சந்தை விலை ஆகிய காரணிகளால் கோதுமைமாவின் விலை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இலங்கை பணியாளர்களுக்கிடையிலான மோதல் மேலும் வலுப்பெற்றுள்ளது

(கொழும்பு)

ஜோர்தானிலுள்ள இலங்கை பணியாளர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினை மேலும் வலுவடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஒரே தொழிற்சாலையில் பணியாற்றும் இலங்கை பணியாளர்களின் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தீவிரமடைந்துள்ளதாக பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இருவர் ஜோர்தானிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதில் ஒரு தரப்பினர் 20 இற்கும் மேற்பட்ட பணியாளர்களின் கை, கால்களைக் கட்டி விடுதி ஒன்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே 14 இலங்கை பணியாளர்கள் விடுதி ஒன்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இரண்டு பிரதிநிதிகள் தற்போது ஜோர்தானுக்குச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதலுடன் தொடர்புடைய இலங்கை பணியாளர்கள் சிலரை ஜோர்தான் பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜோர்தானில் உள்ள இலங்கை பணியாளர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த மோதல் தீவிரமடைந்துள்ளதால் அதில் அந்நாட்டு பொலிஸார் தலையீடு செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலான தகவல்களையும் திரட்டி வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)



முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவியாக உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 661ஆம் பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்னா கொடிதுவக்கு உரையாற்றுவதையும் பூநகரி பொலிஸ் நிலைய அதிகாரி மனோ ரணதுங்கா உபகரணம் வழங்குவதையும் பூநகரி பங்குத்தந்தை பி.பிராயன் முன்னாள் பெண்போராளி ஒருவருக்கு உபகரணம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

# 6 வருடங்களாக வெளியே செல்லாமல் அபோதாபாத் வீட்டில் தங்கியிருந்தேன்

## ஒசாமாவின் மனைவி புலனாய்வுப் பிரிவிடம் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நகரில் உள்ள அபோதாபாத் வீட்டில் வெளியே செல்லாமல் 6 வருடங்களாக தான் தங்கியிருந்ததாக ஒசாமா பின்லேடனின் மனைவிகளில் ஒருவர் கூறியதாக பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒசாமா பின்லேடன் 3 தளங்கள் கொண்ட வீடொன்றில் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட பின்னர் அவரின் 3 மனைவிகள் பாகிஸ்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பெண்களில் ஒருவர் தான் 2006 ஆம் ஆண்டு முதல் மேற்படி வீட்டின் மேல் மாடிகளை விட்டு வெளியே செல்லாமல் தங்கியிருந்ததாக கூறியதாக பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரியொருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.


மேற்படி பெண் யேமனை பிறப்பிடமாகக் கொண்ட அமல் அஹமட் அப்துல்பத்தாஹ் எனஇனம் காணப்பட்டுள்ளார்.

எனினும் ஒசாமா பின்லேடனும் 2006 ஆம் ஆண்டு முதல் அந்த வீட்டில் தங்கியிருந்ததாக அவரின் மனைவி கூறினாரா என்பது பற்றி பேசுவதற்கு மேற்படி பாகிஸ்தான் அதிகாரி மறுத்துள்ளார். நாம் இன்னும் விசாரணைகளை நடத்தி வருகிறோம் என அவர் கூறினார். மேற்படி வீட்டிலிருந்த 8,9 பிள்ளைகளையும் பாகிஸ்தான் அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

இதேவேளை, ஒசாமாவின் மனைவிகளிடம் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை நடத்த அனுமதிக்கப்படவில்லை எனவும் மேற்படி பாகிஸ்தான் அதிகாரி தெரிவித்துள்ளார். (ச-5)

# ஒசாமா தங்கிய வீடு தரைமட்டமாகிறது

(இஸ்லாமாபாத்)



அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன்தங்கியிருந்தவீட்டை விரைவில் இடிக்கப் போவதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஊடகமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது,

பின்லேடன் தங்கியிருந்த பண்ணை வீட்டுக்கு தற்போது ஏராளமானோர் வரத் தொடங்கிவிட்டனர். இந்த வீட்டிற்கு வரும் அனைத்து வழிகளும் இராணுவத்தால் சீல் வைக்கப்பட்டுள்ளன. இந்த வீட்டை விரைவில் இடித்து தரைமட்டமாக்க திட்டமிடப் பட்டுள்ளது. விரும்பத்தகாத சம்பவங்கள் நடப்பதை தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.அதற்கு முன்பாக இந்த வீட்டிற்கு பத்திரிகையாளர்களை அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றி இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அபோதாபாத் நகர பொலிஸ் அதிகாரி நசீர்கான் கூறுகையில்,

தாக்குதல் நடந்த வீட்டில் எந்த சடலத்தையும் நாங்கள் பார்க்கவில்லை. இந்த கட்டடம் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. வெளிப்பகுதியில் தான் நாங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அந்த வீட்டுக்குள் செல்ல எனக்குக் கூட அனுமதி கிடைக்கவில்லை என்றார். (ஸ்ரீ)




# ஜப்பானில் 3 அணுஉலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன

(டோக்கியோ)

ஜப்பானில் மீண்டும் சுனாமி தாக்குதலால் அணு உலைகள் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க கடலில் தடுப்புச்சுவர் கட்டுவதற்காக மூன்று அணு உலைகளில் மின் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி தாக்குதலில் புகுஷிமா டெய்ச்சி அணு உலைகள் வெடித்து சிதறி கதிர் வீச்சை ஏற்படுத்தின. 20ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகினர்.ஜப்பானில் மொத்தம் 54 அணு உலை கள் உள்ளன.

இந்நிலையில் மீண்டும் நிகழாமல் தடுக்க அந்நாட்டில் மேலும் கடல்கரையை ஒட்டியுள்ள அணு உலைகளின் பாதுகாப்பு குறித்த கூட்டம் நடந்தது.இதில் ஹேமோகா எனும் மிகப்பெரிய அணு உலை பசுபிக் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.இதனை சுனாமி தாக்காதவாறு கடல் மேல் தடுப்புச்சுவர் எழுப்ப முடிவு செய்து அதற்கான கட்டுமானப்பணிகளை ஆரம்பித்துள்ளது.

இதற்காக அப்பகுதியில் உள்ள மேலும் 2 அணு உலைகளில் மின் உற்பத்தியை ஜப்பான் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இந்த தடுப்புச்சுவர்கள் இரண்டு வருடங்களில் கட்டிமுடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.இது குறித்து ஜப்பான் பிரதமர் நௌட்டோ கான் கூறுகையில், இத்தகைய தடுப்புச்சுவர்கள் எப்படிப்பட்ட சுனாமி தாக்குல்களையும் தாங்கும் அளவுக்கு 90 சதவீதம் உறுதியாக இருக்கும் என்றார்.(ஸ்ரீ)

# பின்லேடன் கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தியது அல்கொய்தா

(டுபாய்)

பின்லேடன் கொல்லப்பட்டதை உறுதி செய்துள்ள அல்கொய்தா இயக்கம், அமெரிக்காவை பழிக்குப்பழி வாங்குவோம் என்றும் எச்சரித்து இருக்கிறது.

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் உள்ள ஒரு பங்களாவில் பதுங்கி இருந்த அல்கொய்தா இயக்கத் தலைவர் பின்லேடனை கடந்த முதலாம் திகதி அதிகாலை அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த கொமாண்டோ படையினர் சுட்டுக்கொன்றனர். பின்லேடன் கொல்லப்பட்ட தகவலை 5 நாட்களுக்கு பின்னர் அல்கொய்தா இயக்கம் உறுதி செய்து உள்ளது. இது தொடர்பாக அந்த இயக்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை புனிதப்போர் தொடர்பான இணையத் தளங்களில் வெளியாகி உள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது,

பின்லேடன் சிந்திய இரத்தம் வீண்போகாது. அமெரிக்காவைப் பழிக்குப்பழி வாங்குவோம்.அந்த நாட்டின் மீதும் அதன் நட்பு நாடுகளின் மீதும் எங்களுடைய தாக்குதல்கள் தொடரும்.

இறைவனின் அருளாலும் ஆதரவாலும் ஒசாமா உள்ளிட்ட எங்கள் தலைவர்கள் சென்ற புனிதப்போர் பாதையில் நாங்கள் தொடர்ந்து செல்வோம். விரைவில் இறைவனின் விருப்பத்துடன் அவர்களுடைய (அமெரிக்கர்) மகிழ்ச்சி துயரமாக மாறும். அவர்களுடைய இரத்தம் அவர்களுடைய கண்ணீருடன் சங்கமமாகும்.

பின்லேடன் கொல்லப்பட்டதால் பாகிஸ்தான் மண்ணுக்கு ஏற்பட்டு இருக்கும் களங்கத்தைப் போக்க அந்த நாட்டில் வசிக்கும் முஸ்லிம்கள் தேசத்துரோகிகளுக்கும் திருடர்களுக்கும் எதிராக கிளர்ந்து எழவேண்டும்

இந்த உலகை விட்டு மறைவதற்கு முன் அடக்குமுறைக்கு எதிராக பின்லேடன் ஆற்றிய உரை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த உரை விரைவில் வெளியிடப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அல்கொய்தாவின் புதிய தலைவராக இன்ரநெற் பின்லேடன் தயார்

(லண்டன்)

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டதால் அல்கொய்தா தீவிரவாத அமைப்புக்கு அமெரிக்காவைச் சேர்ந்த அன்வர் அல் அலாகி புதிய தலைவனாகக் கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி லண்டனில் வெளியான பத்திரிகைத் தகவல் வருமாறு, பின்லேடன் கொல்லப்பட்டதால் அல் கொய்தா தீவிரவாத அமைப்புக்கு அன்வர் அல் அலாகி தலைமையேற்கக் கூடும். அமெரிக்காவில் பிறந்த மதப் போதகரான அலாகி இணையத்தளமூலம் தீவிரவாதத்தை பரப்புவதில் பெயர் பெற்றவன்.

எனவே, அல்கொய்தா வட்டாரத்தில் இன்ரநெட் பின்லேடன் என்று அழைக்கப்படுபவர். அலாகியின் செயற்பாடு பற்றி தி சன் பத்திரிகை நடத்திய புலனாய்வில் மும்பை தாக்குதல் போன்ற படுகொலைகளை அமெரிக்கா, இங்கிலாந்தில் அவன் நடத்த விரும்புவது தெரிய வந்தது. 40 வயதான அலாகி 21 வயது கல்லூரி மாணவரை மூளைச் சலவை செய்து, ஈராக் மீதான தாக்குதலை ஆதரித்த இங்கிலாந்து எம்.பி. ஸ்ரீபன் டிம்சை கத்தியால் குத்த வைத்தான். பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவன கம்பியூட்டர்ஊழியர் ராஜிப் கரீம் மூலம் விமானத்தை குண்டு வைத்து தகர்க்க பயன்படுத்தத் திட்டமிட்டவன்.அதை பொலிஸார் முறியடித்ததில் கரீம் இப்போது சிறையில் இருக்கிறான்.

மேலும்,பல வெட்குண்டுத் தாக்குதல் வழக்குகளிலும் அன்வர் அல் அலாகி தொடர்புடையவன் அமெரிக்காவின் சான் டிகோவில் 1996 இல் முதன்முறை குற்றவழக்கில் அபராதம் விதிக்கப்பட்ட அலாகி ,2ஆம் முறை சிறையில் இருந்தான்.2001 செப்டெம்பர் 11 இல் நியூயோர்க் உலக வர்த்தக மைய கட்டடங்கள் தகர்ப்பிலும் முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என அமெரிக்க இரகசிய பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-5)



ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாகிஸ்தானின் குவாட்டாஅருகே உள்ள குச்லக் நகரில் உலாமா-இ-இஸ்லாம் இயக்கத்தினர் கண்டன பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# ஒசாமா தப்பினால் கடித்துக்குதற நாய்

## அமெரிக்காவில் அதிரடி

அமெரிக்க கடற்படையின் சீல் அதிரடிப் படையினர் ஒசாமாவிற்கு எதிராக தாக்குதல் நடத்தச் சென்ற போது இராணுவத்தில் சிறப்பு பயிற்சி பெற்ற மோப்ப நாயையும் அழைத்துச் சென்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகேயுள்ளஅபோதாபாத்தில் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இருந்து சில நூறு அடிகள் தூரத்தில் இருந்த பங்களாவில் பதுங்கியிருந்த சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்க கடற்படையின் சீல் அதிரடிப்படையினர் கடந்த முதலாம் திகதி இரவு சுட்டுக் கொன்றனர்.

ஒசாமா பின்லேடனை கொல்ல சீல் அதிரடிப்படையினர் 79 பேர் ஹெலிகொப்டரில் சென்ற போது அவர்களுடன் இராணுவத்தில் சிறப்பு பயிற்சி பெற்ற மோப்ப நாயையும் அழைத்துச் சென்றனர்.ஒசாமா தங்கியிருந்த பங்களாவின் மேல் பகுதியில் ஹெலிகொப்டரில் இருந்து கயிறு மூலம் சீல் அதிரடிப் படையினர் இறங்கிய போது அவர்களுடன் கழுத்தில் தோறப்பட்டை கட்டப்பட்ட அந்த நாயும் இறக்கப்பட்டது.இருந்தாலும் ஒசாமாவிற்கு எதிரான 40 நிமிட அதிரடி தாக்குத லின் போது நாய் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்த தகவல் இல்லை.


அதேநேரம் அந்த பங்களாவில் வெடிமருந்துகள், ஆயுதங்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய வேறு பொருட்கள் எங்கிருக்கின்றன என்பதை கண்டறிய அந்த நாய் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.ஒருவேளை ஒசாமா தப்பி செல்ல முற்பட்டிருந்தால் அவரைப் பிடிக்கவும் விரட்டிச் செல்லவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

ஒசாமாவிற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையின் போது நாய்க்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.அதற்கேற்ப பாதுகாப்பு கவசத்துடன் அந்த நாய் முன்னால் ஓடியது. அதிரடி நடவடிக்கை முடிந்தவுடன் படையினருடன் திரும்பி விட்டதென நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை கூறுயுள்ளது. (ஸ்ரீ-2)


# திரைவிமர்சனம்

# வானம்

வெவ்வேறு விதமான இலட்சியங்கள், தேவைகள், அபிலாஷைகள், இத்யாதி, இத்யாதிகளுடன் ஒரு சுபயோக சுப தினத்தில் வெவ்வேறு பகுதிகளில் கிளம்பி வந்து சென்னையில் சங்கமிக்கும் எஸ்.டி.ஆர்.( அதாங்க சிம்பு), பரத், பிரகாஷ்ராஜ், அனுஷ்கா, சரண்யா, வேகா உள்ளிட்டவர்களது உயிரையும் பொருட்படுத்தாமல் தங்களது இலட்சியங்களை காற்றில் பறக்க விட்டு பலரது உயிர்களை காக்க காரணமாவது வானம் படத்தின் மொத்த கதையும்.



அதில் சென்னை சிட்டி பெசன்ட்நகர் பகுதியில் குப்பம் ஒன்றில் கேபிள் கலெக்ஷன்பாயாக வசிக்கும் சிம்பு



அலைஸ் எஸ்.டி ஆருக்குஅதே பகுதியில் உள்ள பணக் கார வீட்டுப் பெண் ஒருவர் மீது காதல். அதை காதல் என்பதைவிட அந்தப் பெண் மீது சிம்புவுக்கு ஒரு கண் என்பதே பொருந்தும். காரணம் அந்தப் பெண்ணைப் பார்ட்டி, டிஸ்கோதே, ஸ்டார் ஹோட்டல் பகுதிகளில் பணக்காரர் கெட்அப்பில் சந்திக்கும் சிம்பு அவர் மூலம் நிஜமாகவே பணக்காரர் ஜாதிப் பட்டியலில் இடம் பிடிக்க துடியாய் துடிக்கிறார்.

அதற்காக சிம்புவுக்கு 40 ஆயிரம் ரூபாய் தேவை எனும் நிலையில் நண்பர் சந்தானத்துடன் சேர்ந்து கொண்டு வழிப்பறி, ராப்பரியில் எல்லாம் ஈடுபடும் அவரிடம் சென்னையில் கிட்னியை விற்று ஊரில் தன் மகன் படிப்பை தொடர செய்யும் முயற்சியில் இறங்கும் சரண்யாவும் அவரது வயதான அப்பாவும் வகையாக சிக்குகின்றனர்.



சரண்யா கிட்னி விற்ற பணத்தை சிம்பு தட்டிப் பறித்தாரா பணக்கார காதலியின் கை பிடித் தாரா என்பது ஒரு பக்கம் என்றால், மற்றொரு பக்கம் மிலிட்டரியில் சேர வேண்டும் என்ற தாயின் ஆசையை நிராகரித்து தனியாக மியூசிக் அல்பம் ட்ரூப் நடத்த வேண்டும் எனும் இலட் சியத்துடன்சுயநலம்மட்டுமே கருத்தில் கொண்டு காதலி மற்றும் நண்பர்களுடன் சென்னைக்கு வரும் பரத் படும் பாடுகளையும் அனுஷ்கா உள்ளிட்ட அழகிகளைவைத்து அந்த மாதிரி தொழில் பண்ணும் ராணி அம்மாள் மற்றும் சென்னை சிட்டிக்கு அரவாணி அக்காவுடன் ரயிலேறும் அனுஷ்கா படும் பாடுகளையும் ஊரில் விநாயகர் ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் வாழ்க்கையை தொலைத்த தம்பியைத் தேடி சிட்டிக்கு கர்ப்பிணி மனைவி சோனியா அகர்வாலுடன் வந்து இஸ்லாமியர் பிரகாஷ் ராஜ் படும் பாட்டையும் கலந்து கட்டி கலக்கலாக கதை சொல்லியிருக்கும் காரணத்திற்காகவே இயக்குநர் கிரிஷை பாராட்டலாம்.



என்ன வாழ்க்கையடா இது எனும் ரிப்பீட் பஞ்ச் டயலொக்குடன், கேபிள் ராஜா அலைஸ் ராஜ்க்காக சிம்பு அலைஸ் எஸ்.டி.ஆரும், அவரது லோ கிளாஸ் நண்பர் சந்தானமும் அடிக்கும் லூட்டிகள் செம சிரிப்பு. அதிலும் ஜாதி மாறுவதற்காக எஸ்டிஆருடன் சேர்ந்து கொண்டு சந்தானம் ஊரான் வீட்டு பைக்கில் செயின் பறிக்க செல்லும்இடங் கள்செம காமெடி. படம் முழுக்க இப்படி சிரிப் பாய்சிரிக்க வைத்துவிட்டுக்ளைமாக்ஸில் உருகவைக்கும்சிம்புபாராட்டுச் சொல்லவைக்கிறார். எஸ்.டி.ஆர். எனும் பெயர் மாற்ற ராசி ரொம்ப நன்றாகவே வெற்றி கிடைத்துள்ளது சிம்புவுக்கு!

அல்ட்ரா மோடர்ன் கிடாரிஸ்ட்டாக பரத், வேகாவுடன் செய்யும் கார் பயணத்தில்


தொடங்கி, காதல் பயணம் வரை சகலத்திலும் இன்றைய சுயநல இளைஞர்களை பிரதிபலித்து, கடைசியில் அவர்களுக்கு சரியான சவுக்கடி தந்திருக்கிறார்.

அந்த மாதிரி பெண் சரோஜாவாக அனுஷ்கா அசத்தியிருக்கிறார். பிரகாஷ்ராஜ் தலைக்கு குல்லா, கண்களில் மை என ஒரு பிராப்பர் இஸ்லாமிய தோழராகவே பிரமாதப் படுத்தியிருக்கிறார். சந்தானம், சரண்யா, சோனியா அகர்வால், வேகா, பஜனை கணேஷாக வரும் தயாரிப்பாளர் வி.டி.வி. கணேஷ் உள்ளிட்ட எல்லோரும் வானம் வசப்படும் அளவு நடித்திருக் கிறார்கள் என்றால், இசையமைப்பாளர் யுவனும், ஒளிப்பதிவாளர்கள் ஞானசேகர், நீரவ்ஷா ஆகியோர் வானம் வளப்படும் அளவு தங்கள் பங்கை சரியாக செய்திருக்கிறார்கள். வெற்றி பெற வேண்டும் என்று யார் சொன்னது? பிற உயிர்களுக்காகவும், அவர்களது இலட்சியங்களுக்காகவும் உயிர்த் தியாகம் செய்யலாம் என புதிய இலக்கணம் வகுத்திருக்கிறது வானம்!

மொத்தத்தில் வானம் தமிழ் திரையுலகின் புதிய இலக்கணம்!




# ரஜினியின் வாழ்க்கை சினிமாவாகிறது



இந்திய சுப்பர் ஸ்டார் என்ற பெருமைக் குரிய ரஜினியின் வாழ்க்கை வரலாறு திரைப் படமாகிறது, தமிழில் அல்ல இந்தியில். இந்தியாவில் நடிகர் ஒருவரின் முழு வாழ்க்கை வரலாறு சினிமாவாக எடுக்கப்படுவது இதுவே முதல்முறை.

ரஜினியின் அனுமதியுடன் ரஜினி வாழ்க்கையை சினிமாவாக்கும் முயற்சியில் இறங் கியுள்ளார் அதுல்அக்னிஹோத்ரி. பாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர். இந்தப் படத்தில் நடிப் பவர்கள் குறித்து இன்னும் முடிபு செய்ய வில்லையாம். ரஜினியின் முக அமைப்பை யொத்த சில புதுமுகங்களைத் தேர்வு செய்துள்ளார்களாம். ரஜினியின் உடல்மொழி, யாருக்கு சரியாக வருகிறதோ அவரை ரஜினியாக நடிக்க வைக்கப் போகிறார்களாம்.

படத்துக்கு ரஜினியின் முன்னுரையைப் பெறவும் திட்டமுள்ளதாம். இந்தியாவில் இதுவரை எந்த சினிமா கலைஞரின் வாழ்க்கை வரலாறும் முழுமையாகப் படமாக்கப்பட்டதில்லை.

# அந்தமானில் நண்பன்

இடைவிடாது நண்பனை இயக்கி வருகி றார் ஷங்கர். இயக்குவது ஷங்கர் என்பதால் மூன்று ஹீரோக்கள் இருந்தும் சின்ன முணு முணுப்பில்லை. சரியான நேரத்துக்கு படப் பிடிப்பு தளத்தில் மேக்கப்புடன் ஆஜராகி விடுகிறார்கள் மூவரும்.




இந்தி 3 இடியட்ஸின் ரீமேக்கான இந்தப் படத்தில் இலியானா ஹீரோயினாக நடித்து வருகிறார். ஊட்டியில் தொடங்கிய படப்பிடிப்பு தற்போது அந்தமானில் நடந்து வருகி றது. விஜய் உள்ளிட்டோர் தற்போது அந்த மானில் உள்ளனர்.

ஜெமினி ஃபிலிம் சர்க்யூட் தயாரிக்கும் நண்பனுக்கு ஹரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

சந்தோசமாக இருக்கும் நேரத்தில் குறுக்கே வந்து நிற்கும் முற்றுப் புள்ளி மனச்சாட்சி. ~ஸ்டாலின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பல்கலைக்கழகங்களில் ஆரம்பித்துள்ள அரச எதிர்ப்பு

யுத்தம், அதற்கான செலவு, யுத்த வெற்றி, அதன் கொண்டாட்டம், தேர்தல் அதிலும் வெற்றி என்ற கலகலப்பில் காசுப்பெட்டி காலியாகிப் போன சங்கதியை அரசு அறியாமல் இருந்து விட்டது.

இப்போது ஆரவார நிலைமை அமைதிக்கு வர, ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவர கெடுகாலம் ஆரம்பித்து விட்டதென்பதை கட்டியம் கூறுவதாக நிலைமையுள்ளது.

அதீதமான மகிழ்ச்சியின் பின்னால் துன்பம் என்ற யதார்த்தம் இலங்கை அரசை பொறுத்தவரை சாத்தியமாகி வருவது போலத் தெரிகிறது.

தோற்றவனை விட வென்றவனுக்கே அதிக கவலை என்ற புத்தபிரானின் வாசகம் அற்புதமாக இலங்கை மண்ணில் அரங்கேறப்போகிறது.

இவை ஒருபுறம் இருக்க, இரவோடு இரவாக அத்தியாவசியப் நுகர் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் அரசின் செயலால் மக்கள் ஏங்கிப்போய் உள்ளனர்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்து செல்வதனால் பொருளாதார நெருக்கடியை மக்கள் அனுபவிக்க ஆரம்பித்து விட்டனர்.

பொருளாதார நெருக்கடி என்பது உடனடியாக ஏற்பட்டதல்ல. மாறாக வன்னி யுத்தத்தின் போது, யுத்த வெற்றிக்கு வெடி கொளுத்திய போது, போரின் வெற்றிக்கு விழாவெடுத்த போதெல்லாம் எங்களை அறியாமல் வாழ்க்கைச் செலவு ஏகிறிக்கொண்டது.

இப்போது அதன் உச்ச கட்டத்தை மக்கள் அனுபவிக்கத் தொடங்கிவிட்டனர். அதிலும் குறிப்பாக நிரந்தர வருமானத்தை உழைக்கின்ற அரச சேவையாளர்கள் ஐயா! வாழ்க்கைச் சுமையை தாங்கமுடியாது என்று கதறும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இதன் அடுத்த கட்டம் வேலை நிறுத்தப் போராட்டம், பணிப் புறக்கணிப்பு, சட்டப்படி வேலை என்பன முகிழ்ப்படையும்.

அதன் அறிகுறியாக இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் சம்பள உயர்வு கோரி தமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

அதன் ஒரு கட்டமாக இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த துறைத் தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கூட்டாக எடுத்த இந்த முடிவானது இலங்கை அரசுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தக் கூடியது.

விரிவுரைக்கு செல்கின்றோம் பல்கலைக் கழகம் இயங்குகிறது. ஆனால் துறைத்தலைவர்கள் என எவரும் இல்லை. எப்படியிருக்கிறது நிலைமை? பல்கலைக்கழக ஆசிரியர்களின் இந்த போராட்ட முறை முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. அதே நேரம் உயர்தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியின் போதும் விரிவுரையாளர்கள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர்.

இந் நிலைமை ஏனைய அரச சேவையாளர்களிடம் பரவ நாட்டில் ஒட்டுமொத்த வேலை நிறுத்தம் தலைவிரித்தாடும்.

### 2ஜி ஊழல் வழக்கு

## கனிமொழியின் பிணைமனு மீது விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



(புதுடில்லி) 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கனிமொழியின் முன்பிணை மனு மீதான உத்தரவை டில்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றம் மே 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கனிமொழிக்கு முன் பிணை வழங்க வேண்டும் என அவரது வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி நேற்று முன்தினம் வாதிட்ட நிலையில் அந்த மனுவை சி.பி.ஐ. தரப்பு நேற்று எதிர்த்தது.

ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில் தாம் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக தி.மு.க மாநிலங்களவை உறுப்பினரும் தமிழக முதல்வரின் மகளுமான கனிமொழி தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்றுக் காலை மீண்டும் தொடங்கியது.

இதற்காக டில்லியில் உள்ள சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழியும் கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் இரண்டாவது நாளாக ஆஜராகினர்.

**கனிமொழிக்கே முக்கிய பங்கு!**

சி.பி.ஐ. சார்பில் தனது வாதத்தை நேற்று காலை தொடங்கிய வழக்கறிஞர் யு.யு.லலித் கனிமொழிக்கும் சரத்குமாருக்கும் முன் பிணை வழங்கப்படகூடாது. கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநராக சரத்குமார் இருந்தாலும் அந்த நிறுவனத்தின் முழு கட்டுப்பாட்டின் பின்புலத்தில் கனிமொழி இருந்துள்ளார் என்றார்.

கனிமொழி வெறும் பங்குதாரராக மட்டுமே இருந்தார் என்பதை ஏற்க முடியாது என்ற அவர், கலைஞர் தொலைக்காட்சியை ஆரம்பிப்பது தொடர்பாக அப்போதைய அமைச்சர் ஆ.ராசாவிடம் தொடர்ந்து பேசிவந்துள்ளார். கலைஞர் தொலைக்காட்சிக்கு அனுமதி பெறுவதற்காக மத்திய தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் ராசா பேச்சு நடத்தியுள்ளார். கலைஞர் தொலைக்காட்சியின் பின் புலத்தில் இயங்கியவர் கனிமொழிதான்.

ஒரு நிறுவனத்தின் 80 சதவீத பங்குகளை ஒரு குடும்பம் வைத்திருக்கும் போது அந்த நிறுவனத்தின் மூளையாக வேறு ஒருவர் செயற்பட்டு வருகிறார் என்பதை நம்புவதற்கு கடினமாக உள்ளது என்று லலித் வாதிட்டார்.

மேலும் கனிமொழி மீதான குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன என்பதால் குற்றவியல் சட்டம் 88சி யின்படி அவர் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். அத்துடன் அவரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட வேண்டும். வழக்கமான பிணைமனுதாக்கல்செய்ய மட்டுமே அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்று சி.பி.ஐ. வழக்கறிஞர் யு.யு.லலித் வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஓ.பி.சைனி இந்த வழக்கின் முடிவை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

இதேவேளை நடந்துமுடிந்த தமிழக சட்டமன்ற தேர்தல் முடிபுகள் 13ஆம் திகதி வெளிவரவிருக்கின்றது. இந் நாளுக்கு அடுத்த நாள் கனிமொழி வழக்கின் தீர்ப்பு வெளிவருகிறது. இதுவும் தி.மு.கவுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ- )

## இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் சம்மேளனத்தால் நடத்தப்படும் சண்டி லிப்பாய் பிரதேச கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.கோகுலராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் ஆண்களுக்கான கரப்பந்து போட்டியும் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மென்பந்து, உதைபந்தாட்டம், கபடி ஆகிய போட்டிகளும் எதிர்வரும் 29 ஆம் திகதி விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-3)

## தேடித் தெளிந்து இயேசுவோடு தங்கும் நபராக நாமும் இருப்போம்

உயித்தெழுந்த இயேசு பல சீடர்களுக்குத் தோன்றினார் என லூக்கா நற்செய்தி விரிவாக எடுத்துக் கூறுவதை திருச்சபை இன்று செய்தியாகத் தருகின்றது. அவ்வாறு இயேசு தோன்றிய நிகழ்ச்சிகளுள் மிகச் சிறப்பான ஒன்று அவர் எம்மாவு வழியில் சீடரைச் சந்தித்தது ஆகும். இயேசுவின் இரு சீடர்கள் எருசலேமிலிருந்து பதினொரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள எம்மாவு என்னும் ஊர் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். வழிநெடுகக் கலந்துரையாடிய வண்ணம் பயணம் போகிறார்கள். பாதியில் பயணி ஒருவர் மூன்றாமொருவராக இணைகிறார். அப்போது அவர்கள் அடையாளம் தெரியாத ஒரு மனிதரை வழியில் சந்திக்கின்றனர்.

அங்கே விளக்கப்பதிவுகள் உயிர்ப்பு மகிழ்வுகளால் மனங்கள் நிறைகின்றன. இக்கட்டான, சிக்கலான, குழப்பமான நேரங்களில் தனியொரு மனிதராகப் புலம்புவது நல்வழி அல்ல. அது தற்கொலைக்கு இட்டுச் செல்லலாம் அல்லது வன்கொலைக்கு வெறியூட்டலாம் என்பது திண்ணம். தேடல் மனநிலையோடு ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடிச் சென்றால் அந்தப் பயணம் ஒரு நல்வழிப் பயணமாகும். எம்மாவு சீடர்கள் தேடுகிறார்கள். நன்றாகக் கலந்துரையாடுகிறார்கள்

இருவராகச் சேர்ந்து தீமையைத் திட்டமிடுவது நல்வழியல்ல. அது பண்பற்ற இயல்பாகும். அது பயணற்ற செயலுமாகும். திறந்த மனநிலையோடு மூன்றாம் ஆளுக்கும் செவிமடுத்தல் பயணம் தரும் நல்வழியாகும். எம்மாவு சீடர்கள் செவிமடுக்கிறார்கள். திறந்த மனத்தோடு செயற்படுகிறார்கள். மூவராகப்பேசிவிட்டு கலைந்து செல்வது நல்வழிப் பயணமல்ல. அது அருள் பெறும் சூழலுக்குத் தடையாகிவிடும். உறவோடு விருந்தோம்பல் செய்து அன்பு ஒன்றிப்பைக் காட்டுதல் பயணம் தரும் நல்வழியாகும்.

இயேசுவை நாம் நம்புகிறோம். அவர் நம்மோடு நடமாடி, நம்மோடு பழகிச் செயற்படாவிட்டாலும் அவர் நம்மோடு தங்கி வாழ்கிறார் என்பதை நம் கண்கள் காணவேண்டும். நம் கண்கள் திறக்கப்படவேண்டும். குறிப்பாக இயேசு இரு செயல்கள் செய்கிறார். முதலில் மறைநூலை அவர் சீடர்களுக்கு விளக்கி உரைக்கிறார். பின்னர் சீடர்களோடு அப்பம் பிட்டு பகிர்ந்து கொள்கிறார். இந்த இரு நிகழ்ச்சிகளும் திருப்பலியின்போது நிகழ்கின்றன. இச் செயற்பாடு திருச்சபையில் இயேசு தொடர்ந்து உடனிருக்கிறார் எனவும் செயற்படுகிறார் எனவும் நாம் நம்புவதைத் திருப்பலி வழியாக நினைவு கூருகிறோம். இதனால் இயேசுவிடமிருந்து நாம் பெறுகின்ற வாழ்வு பிறரோடு பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

### பரமபிதா காட்டிய பாதை

நம் தேவன் நம்மோடு தங்க வேண்டும். ஒரு தலைவரோ பெரிய மனிதரோ தரும் மகிழ்ச்சியை விட பலமடங்கு பெரிதல்லவா இந்த மகிழ்ச்சி. ஒப்பிட முடியா அனுபவம் அது. இயேசு தங்கும் நபராக குடும்பமாக எங்கள் குடும்பமும் இருக்கட்டும். இதனால் எங்களுக்கு எதுவும் குறையிருக்காது. இதற்காக இயேசு எங்களோடு தங்க வேண்டும் அல்லது நாங்கள் இயேசுவோடு தங்க வேண்டும்.

எம்மாவு சீடரோடு இயேசு தங்கியதால் அவர்கள் அகக்கண்கள், அறிவுக்கண்கள், சமூகப்பார்வைகள் திறக்கப்பட்டன. பயம் நீங்கி நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டது. அன்பால், ஆர்வத்தால் பற்றி எரியும் இதயம் பெற்றவராயினர். புதிய வலிமை பெற்று தங்கள் வாழ்க்கையில் நிறைவைக் கண்டனர். “சக்கேயுவே இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்” என்று இயேசு சொல்லி சக்கேயு வீட்டிற்கு இயேசு சென்று கொஞ்சநேரம் தங்கி, விருந்துண்டார். சக்கேயுவில் என்ன மாற்றம், மகிழ்ச்சி, அவனது மகிழ்ச்சிக்கு எல்லைஏது? பணமும் பதவியும் தராத மகிழ்ச்சியை இயேசு அவரோடு தங்கியதால் பெற்றார். அவர் வீட்டிற்கு “மீட்பு உண்டாயிற்று” என்ற ஆசீர்வாதம் பெருமை என்பன கிடைத்தது.



ஆகவே, இயேசுவோடு தங்கும் பெரும் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்வோம். இயேசு தங்கிய வீடுகளும் அங்கு வாழ்ந்தவர்களும் அவரோடு தங்கியவர்களும் சிறப்பாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். இதுதான் இயேசு நம்மோடு தங்குவதிலும் நாம் இயேசுவோடு தங்குவதிலும் உள்ள பலன். ஆகவே இயேசுவோடு தங்கும் பெரும் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளுவோம். எங்களோடு தங்கும் ஆண்டவரே என்று அழைப்போம். ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்வை உலகில் பிறரோடு வாழ ஆசீரோடு இனிது நாம் வாழ்வோம்.

ம. ஜெரான்சிங்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# பாடசாலை மாணவரொருவர் CIMA பயில முடியுமா?

CIMA பாடநெறியானது சிறப்பாக முகாமைத்துவ கணக்கீடு தொடர்பாக தொழில்சார் தகைமையை வழங்குகின்ற ஒரு பாடநெறியாகும். இத்தொழில்சார் தகைமையானது பிரித்தானியாவின் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவத்தினால் (Charted Institute of Management Accountants) வழங்கப்படுவதோடு இது இலங்கையை போன்று பல்வேறு நாடுகளிலும் விசேடமாகவும் சிறப்பாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உலகின் அரச மற்றும் தனியார், அரசசார்பற்ற பல நிறுவனங்களின் பல துறைகளில் உயர்வேலை வாய்ப்பு மட்டத்தை பெறுவோரிடையில் காணப்படும் பிரதான தொழில்சார் தகைமையாக இது காணப்படுகிறது.

பதினாறு வயது தொடங்கியே CIMA கற்பதற்கும் CIMA பரீட்சையில் தோற்றுவதற்கும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. CIMA பாடநெறியின் முதலாவது அலகில் ஐந்து பாடங்கள் காணப்படுவதோடு இது வியாபாரக் கணக்கீட்டு சான்றிதழில் CBA முறையிலான பரீட்சையாகும். இது வணிகப் பாடப்பரப்பினைக் கற்ற ஒருவருக்கு இலகுவாக முகம்கொடுக்கக்கூடிய ஒரு பரீட்சையாகவே அமைகிறது. உயர்தர வணிகப் பிரிவில் கற்கிற மூன்று பாட அலகுகளுக்கு மேலதிகமாக Fundamental of Business Mathematics மற்றும் Fundamental of Ethics, Corporate Governance and Business Ethics ஆகிய இரண்டு புதிய இலகுவான பாடங்கள் மிக இலகுவான விளக்கங்களோடு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே உயர் தரத்தில் நாம் பெற்றுக்கொண்ட அறிவை வைத்துக் கொண்டு CIMA பயில ஆரம்பிப்பது மிக இலகுவானது என்பதோடு சாதாரண ஆங்கில அறிவு காணப்படுவது ஒரு அடிப்படைத்தேவையாகும். முதலாவது கட்ட CBA முறையிலான பரீட்சையை முகங்கொடுக்க ஆறுமாத காலம் போதுமானதாகிறது. அத்தோடு இப்பாடநெறியின் அடுத்த பாடங்களை இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழுமையாகப் பூர்த்திசெய்யமுடிகிறது. இப்பாடநெறியை முழுவதுமாக பூர்த்தி செய்வதனூடாக எதிர்காலத்திற்குத் தேவையான ஒரு முகாமைக் கணக்காளராக உங்களை உருவாக்கிக் கொள்ள முடியுமென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. க.பொ.த.(சா/த) பெறுபேறுகள் வெளியான உடனேயே CIMA பாநெறியைப் பயிலத் தொடங்கினால் நிகழ்காலத்தில் நீங்கள் CIMA இன் இறுதிக்கட்டப் பரீட்சைகளை நெருங்கிய ஒரு மாணவராக இருப்பதோடு க.பொ.த.(உ/த) இல் நீங்கள் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டாலும் அது ஒரு வரலாற்று ரீதியாக இருப்பதோடு நீங்கள் சாதாரண தரத்திலேயே CIMA பயில தொடங்கியபின் உங்களது உயர்தர பரீட்சை பெறுபேற்றுடன் CIMA வையும் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு உங்களுக்கு கிட்டியிருக்கும்.

உலகம் பூராகவும் 165 நாடுகளில் ஒரு இலட்சத்து 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு CIMA முகாமைத் துவ நிறுவனம் செயற்படுவது மிக பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும். இலங்கையில தற்போது CIMA பயின்ற உறுப்பினர்கள் 12,000க்கும் மேற்பட்டுக் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த அளவிலானவளர்ச்சி உங்களுக்கு வியப்பை ஊட்டினாலும் நீங்களும் நாளைய முகாமைத்துவக் கணக்காளராக வரவேண்டுமெனில் தெரிவு செய்ய வேண்டிய ஒரே பாடநெறியாக CIMA திகழ்வது சந்தேகத்திற்கு இடமற்றதாகின்றது.

விளம்பர விபரணம்

# ஹேலீஸ் கொன்சியூமர் தனது விற்பனை மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில்

# உலகப் புகழ்பெற்ற டிஜிட்டல் கமராக்களை அறிமுகப்படுத்தியது



ஹேலீஸ் கொன்சியூமர் தொழில்நுட்ப மற்றும் விற்பனை மாநாட்டில் நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஜுட் சில்வா உரை நிகழ்த்துகிறார். ஃபூஜி பில்ம் வியாபார அபிவிருத்தி அலுவலகத்தின் பிரதிநிதி சிந்தக முகாந்திரம் அருகில் காணப்படுகிறார்.

ஹேலீஸ் கொன்சியூமர் நிறுவனம் தனது பிரதான விற்பனை முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கென அண்மையில் இன்டர்கொன்டினென்டல் ஹோட்டேலில் நடத்திய விற்பனை மற்றும் தொழிநுட்பமாநாட்டிற்கு ஃபூஜிஃபில்ம் அனுசரணை வழங்கியது. இந்த மாநாட்டில் தற்போதுள்ள ஃபூஜிஃ பில்ம் டிஜிட்டல் கமராக்களின் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டின் புதிய மொடல்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

ஃபூஜிஃபில்ம் வழங்கும் நவீன Finepix டிஜிட்டல் கமராக்களின் உதவியுடன் தமது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு இப்பொழுது நம்நாட்டு புகைப்படக்கலை ஆர்வலர்களுக்கு கிடைத்துள்ளது. விசேட அம்சங்களையும் செயற்பாடுகளையும் கொண்ட புதிய ஃபூஜிஃபில்ம் டிஜிட்டல் கமராக்கள் நீங்கள் கற்பனை செய்வதைப் பார்க்கிலும் சிறந்த புகைப்படங்களைத் தரும் அதிநவீன டிஜிட்டல் SLR pro-level கமராக்கள் முதல் நவநாகரிகமான Point-and-shoot கமராக்கள் வரை பல விதமான மொடல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதால் புகைப்படக்கலை நிபுணர்கள் மட்டுமன்றி பொழுதுபோக்காகப் படம் பிடிப்பவர்களும் தமக்கு உகந்த கமராவைத் தெரிவு செய்து வாங்கலாம். சகல ஃபூஜிஃபில்ம் Finepix கமராக்களும் உலகப் புகழ் பெற்ற Fujinon வில்லைகளைக் கொண்டுள்ளன. இந்த வில்லைகளே விண்வெளியிலுள்ள செய்மதிகள், தொலைக்காட்சி மற்றும் திரைப்படக்கமராக்கள், பாதுகாப்புக்கமராக்கள், கையடக்கக் கமராக்கள் போன்ற பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சகல ஃபூஜிஃபில்ம் Finepix கமராக்களிலும் அடங்கியுள்ள இத்தொழில்நுட்பம் முன்னேற்றகரமான படப்பிடிப்புச் செயற்பாடுகளுக்கும் நவீன வசதிகளுக்கும் இடமளிக்கிறது.

இந்த விசேட வசதிகளுள் Image stabilization, panorama mode, Tracking auto focus, Smile and blink detection, Multi motion capture, High speed continuous shooting என்பன உள்ளடங்கும் சாதாரணமாக இதே வகையைச் சேர்ந்த ஏனைய கமராக்களில் இந்த வசதிகள் காணப் படுவதில்லை. புதிய ஃபூஜிஃ பில்ம் Finepix கமராக்கள் 3x zoom முதல் 30x zoom வரையிலான zooming திறனைக் கொண்டுள்ளதால் வனவிலங்குகளைப் படம் பிடித்தல், இயற்கைக்காட்சிகளைப் படம்பிடித்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்கு உகந்தவை.

30 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அநேகமான மக்கள் இப்பொழுது நாட்டின் இயற்கை வனப்புக்களையும் கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவமான இடங்களைப் பார்வையிடுவதற்காக பயணங்கள் மேற்கொள்கின்றனர். முன்னொருபோதும் சென்றிராத இடங்களுக்குக் கூட பலர் செல்கிறார்கள். இப் பயணங்களின் போது தமது மனதைக் கவர்ந்த காட்சிகளைத் தரமுயந்த புகைப்படங்களுக்குள் முடக்கிவைக்க ஃபூஜிஃபில்ம் Finepix டிஜிட்டல் கமராக்கள் அருந்துணையாகும். ஏராளம் சிறப்பம்சங்களுடன் வசதியான விலையில் கிடைக்கும் இந்தக் கமராக்கள் ஹேலீஸ் கொன்சியூமர் நிறுவனத்தின் ஒருவருட உத்தரவாதத்துடன் வழங்கப்படுகின்றன.

இக் கமராக்களை சகல பிரபல புகைப்பட ஸ்ரூடியோக்களிலும் தெரிவுசெய்யப்பட்ட சிங்கர் விற்பனை நிலையங்களிலும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள வேர்ல்ட் ஒப் ஹேலீஸ் விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்யலாம்.

விளம்பர விபரணம்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து இலங்கை தெளிவுபடுத்த வேண்டும்

## கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

(டெல்லி)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக விசனமடைவதிலும் பார்க்க இலங்கை தனது செயற்பாட்டை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் பணியாற்றியபோது புலனாய்வுப் பிரிவின் தலைவராக செயற்பட்ட கேணல் ஆர்.ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய ஆய்வுக்குழு இவர் எழுதிய கட்டுரையை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. அந்தக் கட்டுரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்டுரையின் சுருக்கம் வருமாறு,

இலங்கையின் பதிலளிக்கும் கடப்பாடுகள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நியமித்த மூவர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கையானது இரண்டு பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தியுள்ளது. நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் பலவற்றைக் கண்டறிந்துள்ளது.

தமிழ் மக்களின் அடிப்படைத் துன்பங்கள் சட்டவிதியை உறுதிப்படுத்தும்போது நாட்டில் மனித உரிமைகள் மீறப்படும் கட்டமைப்பு அடிப்படைச் சுதந்திரம் மறுப்பு சுதந்திர ஊடகம் போன்ற விடயங்கள் தொடர்பாக தீர்வு காணப்படவில்லை என்ற உணர்வே காணப்படுகிறது. இந்த நிபுணர்குழுவின் கண்டுபிடிப்புக்கள் புதியவையல்ல.

இதே குற்றச்சாட்டுக்கள் பல்வேறு வடிவங்களில் சர்வதேச முகவரமைப்புக்களின் செய்திகளில் ஊடகங்களில் மற்றும் ஏனைய அரசாங்கங்களிடமிருந்து 2009ஆம் ஆண்டு பெப்ரவரிக்கு முந்திய காலத்திலிருந்தே வெளிவந்தன.

ஆரம்பத்திலிருந்தே இந்தக் குற்றச்சாட்டுக்களை சர்வதேச சதியின் ஓர் அங்கமாக முத்திரை குத்துவதன் மூலம் அலட்சியப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்திருந்தது. பதிலளிக்கும் கடப்பாடு தொடர்பாக சர்வதேச ரீதியாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் பதிலானது மூன்று வகையானதாக காணப்பட்டது.

யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது எந்தவொரு பாதிப்புகளும் இடம்பெறவில்லையென ஒட்டுமொத்தமான மறுப்பு புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கையின் போது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையை நியாயப்படுத்தல், ஐ.நா மற்றும் சர்வதேச சமூகத்திற்கு பதிலளிக்கும் கடப்பாட்டை நிராகரித்தல் போன்ற 3 வகையாக அரசாங்கத்திற்கு பதிலளிக்கும் கடப்பாட்டை நிராகரித்தல் போன்ற 3வகையாக அரசாங்கத்தின் பதில்கள் அமைந்திருந்தது.

அரச உயரதிகாரிகளின் நிர்வாக முறைமை சகதிக்குள் உள்ளன. இந்தியாவின் வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தில் முன்னேற்ற மின்மை இதற்கு நல்ல உதாரணமாகும். ஐ.நா. அறிக்கை தொடர்பாக தனது நடவடிக்கையை இலங்கை தெளிவுபடுத்த வேண்டும். இதற்கு மாற்றுவழி இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றி
## மழையின் குறுக்கீட்டால் சென்னை சோகம்

(கொல்கத்தா)

மழையின் குறுக்கீட்டால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஆமை வேக ஆரம்பத் துடுப்பாட்டத்தினால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏமாற்றமடைந்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4ஆவது 'இருபது - 20' கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் கொல்க்த்தாவில் நேற்று நடைபெற்ற 48 ஆவது போட்டியில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப்போட்டி மழை காரணமாக அரை மணிநேரம் தாமதமாக ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை யிழந்து 114 ஓட்டங்களை எடுத்தது.



இதில் சுப்ரமணியம் பத்ரிநாத் 41 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அப்துல்லா, யூசப் பதான், பாலாஜி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 115 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 61 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

எனினும் மழை தொடர ஆட்டம் நிறுத்தப்பட்டு டக்-வேத் லூயிஸ் முறையில் 10 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றி என அறிவிக்கப்பட்டது.

இதில் ஜக் கலிஸ் ஆட்டமிழக்காமல் 23 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 21 ஓட்டங்களையும் அணித்தலைவர் கௌதம் காம்பீர் 16, மனோஜ் திவாரி ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியில் பந்துவீச்சில் ஜொலித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அப்துல்லா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## இந்தியா அணியில் இடம் பிடிப்பேன்
### ராகுல் சர்மா சபதம்

(மொகாலி)

ஐ.பி.எல்.தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி விரைவில் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என புனே வாரியர்ஸ் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ராகுல் சர்மா தெரிவித்துள்ளார்.

நான்காவது ஐ.பி.எல்.தொடர் இந்தியாவில் நடக்கிறது.இதில் புனே வாரியர்ஸ் அணியில் இடம் பெற்றுள்ள பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இளம் பந்துவீச்சாளர் ராகுல் சர்மா (வயது 24), 9 போட்டிகளில் 11 விக்கெட் கைப்பற்றியுள்ளார்.

இதுகுறித்து ராகுல் சர்மா கூறியதாவது,

ஐ.பி.எல்.தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. இத்தொடர் இளம் வீரர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது.இத்தொடர் மூலம் இளம் வீரர்கள் தங்களது திறமையை நிரூபித்து தேசிய அணியில் இடம்பிடிக்கலாம். இந்திய அணிக்காக விளையாடுவது எனது நீண்ட நாள் கனவு, இலட்சியம்.

ஐ.பி.எல்.தொடரில் முழுத் திறமையை வெளிப்படுத்தி, விரைவில் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக முழுவீச்சில் தயாராகி வருகிறேன் என்றார்.

## டில்லி டேர் டேவில்ஸ் அணியை
## மீண்டும் வீழ்த்தியது மும்பை அணி



(மும்பை)

சகலதுறையிலும் ஜொலித்த மும்பை இந்தியன்ஸ் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல் தொடரில் மும்பையில் நேற்று நடைபெற்ற 49 ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர் டேவில்ஸ் அணித் தலைவர் சேவாக் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 178 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் அம்பதி ராயுடு 39 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 59 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 32 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 49 ஓட்டங்களையும் பிலிசாட் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மோனி மோர்க்கல், இர்ப்பான்பதான், நடீம், ஹோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 179 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டிய டில்லி டேர் டேவில்ஸ் அணி 19.5 ஓவர்களில் 146 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹோப்ஸ் 44 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் 27 பந்துகளில் (4 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உட்பட) 37 ஓட்டங்களையும் இர்பான் பதான் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங், லசித் மலிங்க, முனாப் பட்டேல், பொல்லார்ட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் குல்கர்னி ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் அதிரடி ஆட்டம் வழங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் ராயுடு ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தொடர்ச்சியாக மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்தது.

அத்துடன் டில்லி டேர் டேவில்ஸ் அணியை இத்தொடரில் இரண்டாவது முறையாகவும் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தியது.

## தென்னாபிரிக்கா செல்கிறது இலங்கை அணி

இலங்கை கிரிக்கெட் அணி இந்த ஆண்டு இறுதியில் தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடதிட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது.

## புலியைத் தத்தெடுக்கிறார் தோனி

இந்திய கிரிக்கெட் வீரர்கள் மிருகக்காட்சி சாலையில் இருந்து விலங்குகளை தத்தெடுப்பது சமீபகாலமாக அதிகரித்துள்ளது. ஜவகல்ஶ்ரீநாத் சிறுத்தையையும், அனில் கும்ளே ஒட்டகசிவிங்கியையும், சகீர்கான் புலியையும் தத்தெடுத்துள்ளனர்.

இந்த வரிசையில் தற்போது தோனியும் இணைய உள்ளார். மைசூரில் உள்ள மிருகக்காட்சி சாலையில் இருந்து புலி ஒன்றை தத்தெடுக்க முடிவு செய்துள்ளார். தற்போது அதிக அளவிலான போட்டிகளில் பங்கேற்றிருப்பதால் தோனிக்கு சரிவர நேரம் கிடைப்பதில்லையாம். ஐ.பி.எல். ஆட்டங்கள் முடிந்த பின்னர் தோனி புலியை தத்தெடுக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 10 | 8 | 2 | 0 | 0 | 16 | +0.735 |
| கொல்கத்தா | 11 | 7 | 4 | 0 | 0 | 14 | +0.464 |
| சென்னை | 10 | 6 | 4 | 0 | 0 | 12 | +0.223 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 9 | 5 | 3 | 0 | 1 | 11 | +0.495 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 10 | 5 | 4 | 0 | 1 | 11 | -0.194 |
| கொச்சி | 10 | 5 | 5 | 0 | 0 | 10 | -0.394 |
| டில்லி | 11 | 4 | 7 | 0 | 0 | 8 | -0.312 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 10 | 3 | 7 | 0 | 0 | 6 | -0.125 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 8 | 3 | 5 | 0 | 0 | 6 | -0.898 |
| புனே வாரியர்ஸ் | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -0.199 |

## இன்றைய ஆட்டங்கள்



# அரசுடன் கைகுலுக்குவதன்...

கை குலுக்குவதன் மூலமே தமிழ் மக்கள் முன்னேறிச்செல்லமுடியும் இவ்வாறு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை நேற்றுத் தனது யாழ். அலுவலகத்தில் சந்தித்த போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் நடு நிலை பற்றாக்குறை உள்ளது. நாட்டில் நிலவிய பயங்கரவாதத்திற்கு தீர்வு கிடைத்துள்ளது. தற்போது அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அதற்கு காலம் வந்துவிட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் எமக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை தமிழ்த் தலைமைகள் சரிவர பயன்படுத்தவில்லை.

நாங்கள்தான் எங்களது பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும். இந்தியா போன்ற நாடுகள் உதவும் என எதிர் பார்க்கக்கூடாது.

அவர்கள் தமது நாட்டின் நலனை முன்நிறுத்தியே தலையிடுவர். அதேபோன்றுதான் அமெரிக்காவின் ரொபேர்ட் ஓ பிளேக்கும் எமது பிரச்சினையை தீர்க்க வரமாட்டார்.

ஐ.நாவின் தருஸ்மன் அறிக்கையை வைத்து இலங்கை அரசுடன் முரண்பட்டு பழிவாங்க நினைப்பது மீண்டும் 30 வருடம் அழிவுப்பாதைக்கு செல்வதற்கான முயற்சியாக அமையும்.

மாறாக உலக மகா யுத்தத்தின் பின் ஜேர்மன், ஜப்பான் நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து முன்னேறியது போன்று நாமும் இலங்கை அரசுடன் கைகுலுக்குவதன் மூலமே முன்னேறிச் செல்ல முடியும்.

ஈபிடிபி எது நடக்கும் என்று கூறியதோ அதுவே நடந்துள்ளது. இப்போது எது நடக்க போகின்றது என சொல்கின்றோமோ அதுவே நடக்கும். இது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்காக உருவாக்கப்பட்டது. ஈ.பி.டி.பி. கட்சிக்காகத் தான் உருவாக்கப்பட்டது.

இலங்கை இனப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தினை ஆரம்பமாகக் கொண்டு மேலதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தீர்வுகாண வேண்டும் இதனை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியும் இணங்கியுள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் எதிர் காலத்தில் இருக்கமுடியாது.. எனினும் படைமுகாம்களை தவிர்க்க முடியாது. தென்னிலங்கை போன்ற சுதந்திரம் வட இலங்கையிலும் இருக்கும்.

யாழ். குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியை விரைவுபடுத்தி மீள்குடியேற்ற நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு மகேஸ்வரி நிதியத்தின் மூலம் மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொள்ள அனுமதி கேட்டுள்ளோம். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ச-5)

# நாடாளுமன்ற விவா...

இருக்காது என அவர் கூறியுள்ளார். பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அழைப்பின்பேரில் அந்நாட்டுநாடாளுமன்ற நடைமுறைகளை அறிந்து கொள்வதற்காகலண்டன்சென்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

நேரடி ஒலிபரப்பு ஆரம்பித்தவுடன் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மேலும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வர் என நம்புகிறோம் எனக் கூறிய அவர் இதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பயங்கரவாதத்தை தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கியதாகவும் அவர் கூறியுள்ளார். (ச-5)

# வனவாசம் செல்கிறார்...

இந்த நிகழ்வில் ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும் மேல்மாகாணசபை அமைச்சருமான உதய கம்மன்பில, ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க உள்ளிட்ட பலரும் மொட்டையடித்துக் கொண்டு காணிக்கை செலுத்தவுள்ளனர்.

அதையடுத்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க இன்று தொடக்கம் பத்து நாட்கள் வனவாசம் செய்து தவம் செய்யவுள்ளார்.

இவருடன் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த சுமார் 25 பேரும் மொட்டையடித்து வனவாசம் செல்லவுள்ளனர்.

புத்தரின் 2600வது பிறந்தநாள் நிகழ்வுகளை முன்னிட்டே இவர்கள் மொட்டையடித்து காணிக்கையை செலுத்தவுள்ளதுடன் பத்து நாட்கள் பற்றுகளைத் துறந்து தவம் செய்யவும் திட்டமிட்டுள்ளனர். (ச-5)


## சிகரம் ஊடக இல்லம்

ஓராண்டு நிறைவை முன்னிட்டு

**சிகரம் தொடு** (ஏப்ரல்–மே)

----- யாழ் இசைவிழா சிறப்பிதழ் -----

(27 உள்நாட்டு, வெளிநாட்டு பாரம்பரியக் கலை ஆற்றுகைகள் தொடர்பான விரிவான ஆக்கங்கள், படங்களுடன்)



வடக்கு மாகாண கல்வி வலயங்கள் தோறும், உள்நாட்டு, வெளிநாட்டு

**பாரம்பரிய கலை ஆற்றுகை வீடியோ காட்சிகள்**

(திகதி, இடம் தொடர்பான விபரங்களுக்குத் தொடர்புகொள்ளுங்கள்)

கணினி, இணையப் பயிற்சிகளுடன் கூடிய

பத்திரிகை - வானொலி - தொலைக்காட்சி - இணையம்

**சிகரம் ஊடகப் பயிற்சி (4ம் அணி)**

மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

(பதிவுகளுக்கு முந்துங்கள்)

ஒரு வருடத்தில்..

- 3 அணிகளாக 60 மாணவர்களுக்கு ஊடகப் பயிற்சி
- 'சிகரம் தொடு' இளையோர் மாதாந்தம் 7 இதழ்கள்
- www.JaffnaToday.com இணைய ஊடகம்
- நூல்வெளியீடுகள், கலந்துரையாடல்கள்
- வீடியோ கலந்துரையாடல் வகுப்புக்கள்
- Jaf Ads விளம்பர சேவை
- SLT Rainbow Pages வட மாகாண முகவர் சேவை
- Legenda Education- Malaysia வட மாகாண முகவர்
- Greenwich University of LONDON வட மாகாண முகவர்

SLT RAINBOW PAGES The National Business Directory | UNIVERSITY of GREENWICH | Legenda Education Group | UEL University of East London

our other services

**சிகரம் ஊடக இல்லம்**

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 300 80 60, 077 77 33 931

மி.அ.: SikaramMedia@gmail.com Web: www.JaffnaToday.com



## MBBS / MD - DENTISTRY (English Medium)

**Study in UKRAINE East Europe & obtain World Class Degree**

CREMEA STATE MEDICAL UNIVERSITY
LUGANSK STATE MEDICAL UNIVERSITY

- உயர்தரமான தங்குமிட வசதி, நூலக வசதி அதனுடன் இன்னும் பல வசதிகளுடன் குறைந்த செலவில் பாடநெறிக்கட்டணம்
- Just 3 A/L passess (Biology, Chemistry & Physics) 2C, 1S

Srilanka Medical Council (SLMC)
World Health Organization (WHO)
General Council of Medicine (UK)
Eligible for Licensing Examination (US) and PLAP TEST (UK)
ஆகிய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டது



- மிக குறைந்த செலவில் விரைவாக நுழைவுச்சீட்டுடன், விசாவும் உங்கள் இல்லங்களுக்கு நேரே கொண்டுவர உறுதியளிக்கின்றோம்.
- ஆவணப்படுத்தல் செயற்பாடுகளுக்கான கட்டணங்களை மாத்திரம் எம்மிடம் செலுத்துவது போதுமானது

Other Courses are also available :-
Aero Space Engineering, Computer Engineering, Computer Science and Many more.

மேலதிக விபரங்களுக்கு உத்தரவாதம் தரக்கூடிய இலங்கையில் அதிகாரம்பெற்றுள்ள உண்மைப்பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்:-

**DR. G. SRIKANTHAN - 077-7266570**

Sricares Overseas Consultancy - Colombo-13. E-mail drsri50@yahoo.com


# இரட்டைவேடம் போடு...

அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைவரை அழிதொழித்த சந்தர்ப்பம் ஆகிய இரண்டு நிகழ்வுகளில் சர்வதேசம் எப்படி நடந்து கொண்டது என்று கவனித்தாலே அதன் இரட்டை வேடம் புலப்பட்டுவிடும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

உலப்பனையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் கொடிய பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டுக்கு அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கிக் கொடுத்துள்ளது.

ஆனால் அது இன்றைக்கு அரசாங்கத்துக்கே ஆபத்தானதாக மாற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயம் பான் கீ மூன், நிபுணர்கள் குழு அறிக்கையென்ற பெயரில் ஒரு மூட்டையை தோள் மீது தூக்கிக் கொண்டு ஜனாதிபதியுள்ளிட்ட ஒரு சிலரை கூண்டில் ஏற்றுவதற்காக பின்னால் விரட்டி ஓடிவந்துகொண்டிருக்கிறார்.

சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணம் பற்றி கேள்வி எழுப்பினாலும், அல் கெய்தா தலைவர் ஓசாமாவின் மரணம் குறித்து கேள்விகளை எழுப் புவதில்லை என்றும் அவர் மேலும் குறிபிட்டுள்ளார். (ச-5)


## காணி விற்பனைக்கு

A9 வீதியில் பளை நகரத்திற்கு அண்மையில் 40 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு :- 0771251074
0773123722

(4889)



## SANEYA HERBAL CARE

செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு ஆயுள்வேத
வைத்தியசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

- ஒரே வாரத்தில் உங்கள்கருமைநிறம் நீங்கி அழகிய நிறம்!!
- முகப் பருக்கள், முகச்சுருக்கம், கரும்புள்ளிகள், கருவளையம், கழுத்து கருமை நீக்கம், உதடு கருமை நீக்கம்.
- உடல் அழகுச் சிகிச்சைகள்
- முடிஉதிர்வு, இளநரை, பொடுகு சிகிச்சைகள்.
- உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்

பெண்களிற்கான 'ஜிம்' பயிற்சிகள்

முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள்

"WE CARE ALWAYS"

முற்பதிவுகளுக்கு-
0777351954, 0774011129

(4891)


# பல்கலை...

முறுகல் நிலை ஏற்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றிரவு 7.00 மணியளவில் ஏற்பட்ட இம் முறுகல் நிலை கைகலப்பு ஏற்பட்ட நிலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் துணைவேந்தர், பதிவாளருக்கு அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக வந்த கோப்பாய்ப் பொலிஸார் மாணவர்களுக்கிடையிலான முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

இவர்களுக்கிடையிலான முறுகல் நிலையையடுத்து முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு உபசார நிகழ்வு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## பதவி வெற்றிடம்

கணனி இயக்குநர் - (பயிலுனரும் விண்ணப்பிக்கலாம்)
ஒப்புநோக்குநர் - (A/L தமிழ் அவசியம்)
புத்தகம் கட்டுநர் - (முன்னனுபவம் விரும்பத்தக்கது)
கடமை நேரங்களில் நேரில்வரவும்.

**சிவரஞ்சனம் ஓவ் செற் பிறிண்டேர்ஸ்**

பலாலி வீதி, கோண்டாவில்.

(அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

(4881)



## வீடு விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு மானிப்பாய் முச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள 3 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு : TP No.: 0779301745, 0776917155

(4884)



## உடன் தேவை

கணனி தமிழ் ரைப்பிங் செய்யக் கூடியவர்கள் (இருபாலாரும்) உடன்தேவை.

நேரில் வரவும்.

**வலம்புரி**

இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Network Software Engineering Salary Scale more than 50,000$

Free Courses fee CISCO-CCNA, BCS-UK, English, ICDL

SMS your name & course to 0772395895 & get Scholorship

Government Scholarship

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324,பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில், யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP www.mcsitcampus.org



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI
Count on us

# யாழ் மண்ணில் உங்களுக்காக

## சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி சேவை மற்றும் பரிசோதனை நிலையம்




**மே 12 மற்றும் 13ம் திகதிகளில்**

9.00 மணி முதல் 5.00 மணி வரை

றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி: 0212 241090
0213 217771
0776 013568

- சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி வாகனங்களுக்கு இலவச பரிசோதனை அறிக்கைகள்
- உங்கள் வாகனங்களுக்கான இலவச மதிப்பீடு
- இன்னும் பல



இலவச சேவை செயற்திட்டம்
AMW வின் தகுதியுள்ள சிறந்த தொழிநுட்பவியலாளர்களைக் கொண்டு நடாத்தப்படுகின்றது


* நிபந்தனைக்கு உட்படும்

உடனடி தொடர்பு
யோகா 0714 594252 - விராஜ் 0772 245719

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
Web : www.amwltd.lk
E mail : maruti@amwltd.com
For Trade-in offer login to : www.amwtradein.com

# நீதித்துறையை ஜனாதிபதியின் காலடிக்குள் கொண்டுவரும் 19 ஆவது திருத்தச்சட்டம்

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியல் யாப்பில் 19 ஆவது திருத்தத்தை மேற்கொள்ள முயற்சிப்பதன் மூலம் நீதித்துறை அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியின் காலடிக்குள் கொண்டு செல்லப்படவுள்ளதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.**

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியானது சுதந்திரமான நீதித்துறை செயற்பாடுகளில் ஜனாதிபதியின் தலையீட்டுக்கு வழி வகுக்கும்.

இந்த உத்தேச திருத்தச் சட்டமானது பிரதம நீதியரசரின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளுக்கு வரையறுப்பதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அதிகாரத்தை கொடுக் கிறது. அதுமட்டுமன்றி நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தையும் அவருக்கு வழங்குகின்றது என்று சரத் என் சில்வா தெரிவித்தார். இதன் மூலம் ஜனாதிபதி தனது கட்டுப் பாட்டின் கீழ் உயர்நீதிமன்றம் மற்றும் கீழ் நீதிமன்றங்களை வைத்திருக்க முடியும். இவ்வாறானதொரு செயற்பாடு இலங்கையின் 200 வருடகால நீதித்துறை வரலாற்றிலோ அல்லது உலகில் வேறெங்குமோ இடம்பெற்றதில்லை.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதியரசர்கள் 65 வயது வரை பணியாற்ற முடியும். ஆனால் பிரதம நீதியரசர் மாத்திரம் 65 வயதுக்கு முன்னரே ஓய்வுபெற வேண்டிய நிலையை ஏற்படுத்தும். இது முரண்பாடான விடயமாகும்.

புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்படவுள்ள சிராணி பண்டாநாயக்க அடுத்த 10 ஆண்டுகளுக்கு பதவிவகிக்கும் வாய்ப்புள்ள போதும் இந்தத் திருத்தச் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால் 65 வயதை எட்ட முன்பே பிரதம நீதியரசர் ஓய்வு பெற வேண்டி ஏற்படும்.

இந்நிலை நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாகவே அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கொடியேற்றம்

அனலைதீவு அரசம்புலம் எழுவடி வயல் எழுமங்கை நாச்சிமார் என விளங் கும் அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெ றும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (ஸ்ரீ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான சங்காபிஷேகம் மற்றும் அலங்கார உற் சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அத்துடன் தினமும் காலை 9.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி உற்சவம் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிகள் விரைவில் மீள ஆரம்பிக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிகள் விரைவில் மீள ஆரம் பிக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.18ஆம் திருத்தச்சட்ட மூலத்தின் அடிப்படையில் ஒரு சில தினங்களில் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுப் பணிகளை ஆரம்பிக்கும் என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள்,நிதி மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுக்கான பெயர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கான பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் விரைவில் அதற்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற பேரவையில் பிரதமர் டி.எம். ஜயரட்ன,சபாநாயகர் சமால் ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பாரா ளு மன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர், எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் ஆகியோர் அங்கம் வகிக் கின்றனர். கொள்கை அடிப்படையில் பாராளுமன்ற பேரவையில்அங்கம் வகிப்பதில்லை என ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களான ரணில் விக்கிரமசிங்கவும் சுவாமிநாதனும் தீர்மானித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## பழைய மாணவர் சங்க கூட்டம்

நவாலி சென் பீற்றேர்ஸ் றோ.க.த. பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# ஒசாமா பின்லேடனுக்காக மட்டக்களப்பில் ஜனஸா தொழுகை

## பிரதியமைச்சரும் பங்கேற்பு

அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் கடந்த முதலாம் திகதி படுகொலை செய்யப்பட்ட ஒசாமா பின்லேடனுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியில் கடந்த 5 ஆம் திகதி ஜனசா தொழுகை நடத்தப்பட்டது.

காத்தான்குடி நகர சபைத் தலைவருடைய ஏற்பாட்டில் ஜாமியுழ்ழாபிரீன் ஜும்ஆ பள்ளி வாசலில் ஜீம்ஆ தொழுகையின் பின்னர் இது நடத்தப்பட்டது. மௌலவி மஹ்ரூத் காஸிமி இத்தொழுகையை நடத்தினார்.

இதன் போது துஆ பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது. ஜனஸா தொழுகையில் பிரதி அமைச்சர் ஏ.எச்.எம். ஹிஸ்புல்லாவும் பங்கேற்றார். (ஸ்ரீ-2)

# ஐ.நா.அறிக்கைக்கு பதிலளிக்குமிடத்து நிலைமை மேலும் மோசமடையும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அஞ்சி வடக்கு கிழக்கிற்கு அதிகார பகிர்வை வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இது தொடர்பில் விசேட குழு அமைத்து உண்மைகளை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதி லளிக்க கூடாது என்று புத்திஜீவிகள் கூறும் போது அரசு பிடிவாதமாக போர்க்குற்றம் தொடர்பாக ஐ.நா.விற்கு அறிக்கை ஒன் றை சமர்ப்பிக்க போகின்றது.

இது நிலைமையை மேலும் மோசமடையவே செய்யும் என்றும் அந்த இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர கூறுகையில்;

பான் கீ மூனின் நிபுணர் குழு இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்களை சுமத்தி அறிக்கை ஒன்றை சட்ட விரோதமாக வெளியிட்டுள்ளது.

ஐ.நா கொள்கைக்கும் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு எதிராக வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கைக்கு பதிலளிக்க சென்றால் சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கும் என்ற அடிப்படை அறிவுகூட இலங்கைக்கு இல்லையா? நிபுணர் குழுவிற்கு பதிலளிக்க தேவையில்லை என்று பல தரப்புக்கள் வலியுறுத்திய போதிலும் பதிலளிக்கும் விடயத்தில் அரசாங்கம் பிடிவாதமாகவே உள்ளது.

அரசின் இவ்வாறான செயற்பாடானது எதிர்காலத்தில் நாட்டிற்கு அச்சுறுத்தலா கவே அமையும்.

இவற்றை அவதானிக்கும் நோக்கில் குழு ஒன்றை அமைக்க உள்ளோம்.இது தொடர்பான இறுதிக்கட்ட பேச்சு குறித்து எதிர்வரும் 12 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றார். (ஸ்ரீ-2)

## ஓய்வூதிய கொடுப்பனவு

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களது மே மாத ஓய்வூதியம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியர்களது ஓய்வூதிய பற்றுச் சீட்டுக்கள் பிரதேச செயலகங்களில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-10)

# தாய்லாந்து தூதுவராக முன்னாள் இராணுவத்தளபதி நியமனம்

(கொழும்பு)



தாய்லாந்து நாட்டுக்கான தூதுவராக முன்னாள் இராணுவத்தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டகொட ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஜேர்மன் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான சரத் கோங்காஹகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜேர்மன் நாட்டின் தூதுவராக கடமை யாற்றிய டீ.பி.மடுகெதர மற்றும் தாய்லாந்து தூதுவராக கடமையாற்றிய ஜே.பி.திஸாநா யக்க ஆகியோரின் பதவிக்காலம் முடிவுற்றதைத் தொடர்ந்து இந்த நியமனங்கள் வழங் கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் கடற்படைத் தளபதி திசர சமரசிங்கவின் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் நியமனத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக வெளிநாட்டமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)